Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
FRIDAY, DECEMBER 30, 2022

வெள்ளிக்கிழமை டிசெம்பர் 30, 2022 | ஒளி: 08 கதிர்: 176 | பக்கம்:09 | வடக்கு,கிழக்கு | Free

# மார்ச் 10க்கு முன் சின்னத் தேர்தல்

அடுத்தவருடம் மார்ச் 10 ஆம் திகதிக்கு முன்னர், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுவதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு, வியாழக்கிழமை (29) தெரிவித்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யும் திகதி உட்பட பல தீர்மானங்களை எட்டுவதற்கு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு வியாழக்கிழமை (29) காலை காலை 10 மணிக்கு கூடியது.

தொடர்ச்சி P2

விவசாயிகளின் வங்கி கணக்குகளுக்கு

# நேற்று ரூ.400 கோடி; இன்று ரூ. 200 கோடி

## ஜனவரி 1 இல் மீதி என்கிறார் அமரவீர

ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்டுள்ள 8 பில்லியன் ரூபாய் (800 கோடி) நிதி, இரண்டு வாரங்களுக்குள் விவசாயிகளின் கணக்குகளில் வரவு வைக்கப்படும் என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

விவசாயிகளின் கணக்குகளில் நிதி வரவு வைக்கும் நிகழ்வு அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் வியாழக்கிழமை (29) காலை, விவசாய அமைச்சில் நடைபெற்றது.

தொடர்ச்சி P2

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்



# கோவையில் சிக்கினார் சஹ்ரானின் சகபாடி

## ‘பேஸ்புக்’ பக்கத்தில் அளவளாவியமை அம்பலம்

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தினத்தன்று இலங்கையில் நடத்தப்பட்ட தொடர் குண்டுவெடிப்புகளுக்கு முக்கிய மூளையாக செயற்பட்ட சஹ்ரான் ஹாஷிமுடன் தொடர்புடைய ஐ.எஸ் உறுப்பினரை இந்திய தேசிய புலனாய்வு அமைப்பு, தமிழ்நாட்டின் கோயம்புத்தூரில் வைத்து புதன்கிழமை (28) கைது செய்ததாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. நாட்டில் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தும் திட்டங்களில் பங்கேற்றதாகக் கூறப்படும் சனோபர் அலி என்ற மற்றொரு நபரையும் புலனாய்வு அமைப்பு கைது செய்துள்ளது.

தொடர்ச்சி P2

# இன்றும் நாளையும் விசேட டெங்கு ஒழிப்பு



நாடளாவிய ரீதியில் இன்றும் (30) நாளையும் (31) விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை செயற்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்தார். நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் கடந்த நான்கு வாரங்களில் டெங்கு நோயாளர்கள் அதிகரித்து உள்ளமையை கருத்திற்கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



# “ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி எம்மிடமே உள்ளது”

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, தமது அணியினரின் கைகளிலேயே இருக்கின்றதே தவிர ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பலகையிலோ அல்லது டாலி வீதியில் உள்ள கட்டடத்திலோ அல்ல என விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வனவளத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# ஜனவரி இறுதி கறுப்பு போராட்ட வாரமாக பிரகடனம்

அரசாங்கத்தின் தன்னிச்சையான வரி திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஜனவரி இறுதி வாரத்தை கறுப்பு போராட்ட வாரமாக பிரகடனப்படுத்த உள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியைக் கருத்திற் கொண்டு அதிக வரிகளை அறவிட அரசாங்கம் தீர்மானித்ததன் காரணமாக, தொழில் வல்லுநர்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருவதாக சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

ஜனவரி முதல் வாரத்தில்

# சுதந்திர கட்சி தலைமையில் புதிய கூட்டணி உருவாகும்

அடுத்த ஆண்டில் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைமையில் புதிய கூட்டணி உருவாகும் எனவும், அடுத்த தேர்தலில் கூட்டணியாக களமிறங்க தீர்மானித்துள்ளதாகவும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு மிகவும் முக்கியமான ஆண்டாக எமக்கு அமையும். ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைமையில் புதிய கூட்டணியொன்றை நாம் உருவாக்கவுள்ளோம். இடதுசாரி குழுக்களை இணைத்துக்கொண்டு பாரிய கூட்டணியை நாம் அமைப்போம். அத்துடன் அடுத்து நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலை வெற்றிகொள்ளும் விதமாக தலைமைத்துவத்தை வழங்குவதற்கும் அன்றைய தினம் நடவடிக்கை எடுக்கப்படும்.



தொடர்ச்சி P2

இலங்கைக்கான வருகை, புறப்பாட்டு

# அட்டைகளை ஜனவரி 1 முதல் ஒன்லைனில் நிரப்பலாம்




இலங்கைக்குள் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் அவசியமான வருகை மற்றும் புறப்பாடு அட்டைகளை 2023 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் ஒன்லைனில் நிரப்ப முடியும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களின் வருகை அட்டை மற்றும் நாட்டை விட்டு வெளியேறும் இலங்கையர்களின் புறப்பாடு அட்டைகளை ஒன்லைனில் பூர்த்தி செய்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

விமானப் பயணிகள், திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.immigration.gov.lk அல்லது https://eservices.immigrationgov.lk ஆகிய இணையதளங்கள் ஊடாக பயணத்திற்கு மூன்று நாள்களுக்கு முன்னர் இந்த அட்டையை ஒன்லைனில் நிரப்புவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

30 ஆயிரம் பேருக்கு

# இறுதி நாளாகும் வருட இறுதிநாள்

அரசாங்கத்தின் புதிய ஓய்வூதியக் கொள்கைக்கு அமைய, 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் நாளை (31) ஓய்வு பெற உள்ளனர் என்று பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரு சில அரச நிறுவனங்களைத் தவிர 60 வயதுக்கு மேற்பட்ட அரச ஊழியர்கள், டிசெம்பர் 31ஆம் திகதியுடன் ஓய்வு பெறவேண்டும் என்று அமைச்சு அண்மையில் சுற்றிக்கை வெளியிட்டிருந்தது.

அதற்கமைய 60 முதல் 65 வயதான 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் ஓய்வு பெற்று வீடு செல்லவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

# குடிநீர் குழாய் திருடிய சகோதரர்களுக்கு ‘கூடு’

வேலைத் திட்டமொன்றுக்கு கொள்வனவு செய்யப்பட்ட குழாய்களை திருடிய சம்பவம் குறித்து கைது செய்யப்பட்ட பெலியத்த பிரதேச சபையின் தலைவர் மற்றும் அவரது மூத்த சகோதரர் ஆகியோரை எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு தங்காலை நீதவான் நீதிமன்றம், வியாழக்கிழமை (29) உத்தரவிட்டது.

குடிநீர் திட்டத்துக்காக கொண்டு வரப்பட்ட ஜீஐ குழாய்களை திருடிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை பெலியத்த பொலிஸார் கைது செய்துள்ளனர்.


சம்பவம் தொடர்பில் 58 வயதான பிரதேச சபை தலைவர் சிறில் முனசிங்க மற்றும் அவரது 67 வயதான மூத்த சகோதரர் பியதாஸ முனசிங்க ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

2.7 பில்லியன் ரூபாய் பெறுமதியான

# அவசர மருந்து உதவிகளை வழங்கியது அமெரிக்கா

தற்போதைய நெருக்கடியில் இலங்கை மக்களுக்கு 7.27 மில்லியன் அமெரிக்க டொலர் ( 2.7 பில்லியன் ரூபாய்) பெறுமதியான அவசர மருந்து உதவிகளை ‘ஹார்ட் டு ஹார்ட் இன்டர்நேஷனல்’ நிறுவனம் வழங்கியுள்ளது. அமெரிக்காவின் மூன்றாவது அவசர மருத்துவ உதவி நன்கொடையாக இது வழங்கப்பட்டுள்ளது. இன்றுவரை மொத்த நன்கொடைகள் 19.9 மில்லியன் அமெரிக்க டொலர் (7.4 பில்லியன் ரூபாய் ) பெறுமதியான அவசர மருந்து நன்கொடைகளை ‘ஹார்ட் டு ஹார்ட் இன்டர்நேஷனல்’ நிறுவனம் வழங்கியுள்ளதாக அமெரிக்காவுக்கான இலங்கை

தூதுவர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். இந்நிலையில், அமெரிக்க மக்களின் தாராள மனப்பான்மை, இலங்கையில் உண்மையான நிலைவரங்களை தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறது எனவும், இந்தச் சிறந்த முயற்சியை ஒருங்கிணைத்ததற்காக ‘ஹார்ட் டு ஹார்ட் இன்டர்நேஷனல்’ மற்றும் வொஷிங்டனில் உள்ள இலங்கை தூதரகத்துக்கு வாழ்த்துகள் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

# 57 இலட்சம் இலங்கையருக்கு மனிதாபிமான உதவி தேவை

இலங்கையிலுள்ள 57 இலட்சம் மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படுவதாகவும் அது இலங்கையின் மொத்த சனத்தொகையில், 26 சதவீதம் அல்லது அதற்கு சற்று அதிகம் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச செஞ்சிலுவை குழு ஆகியவை சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கை தற்போது எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி, சமூகத்திலுள்ள அனைவரையும் பாதித்துள்ளதாக சர்வதேச செஞ்சிலுவை சங்கம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவை குழு ஆகியவை குறித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளன.

குறித்த அமைப்புகளின் தரவுகளுக்கு அமைய, நாட்டில் 5.7 மில்லியன் மக்கள், மொத்த சனத்தொகையில் 26 சதவீதம் அல்லது அதற்கும் மேற்பட்ட அளவானவர்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படுவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# ‘கை’யை கைவிட்டோருக்கு கைக்கோர்க்கும் வாய்ப்பு

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை கைவிட்டுச் சென்ற அனைவரும், மீண்டும் கட்சியில் இணைய சந்தர்ப்பம் இருப்பதாக அந்தக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார்.

இதனடிப்படையில், கட்சியின் யாப்பை மீறி, கட்சியின் கட்டுப்பாட்டுக்கு எதிராக செயற்பட்டவர்கள், அந்தத் தவறுகளை திருத்திக்கொண்டு, கோரிக்கை விடுத்தால், கட்சியில் மீண்டும் இணைவதில் எந்தச் சிக்கலோ, பிரச்சினையோ இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.


ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி பல்வேறு காலங்களில் பல சிக்கல்கள், நெருக்கடிகளை எதிர்நோக்கிய கட்சி என்றும் எனினும் கட்சி எப்போதும் மக்களிடம் இருந்து தூர விலகவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

“ஜனநாயகத்தை மீண்டும் ஸ்தாபிக்க தேர்தல் அவசியம் என்றே நாங்கள் கூறுகிறோம். நாட்டு மக்கள் வீதிக்கு வந்து 69 இலட்சம் மக்களின் வாக்குகளை பெற்ற ஜனாதிபதியை விரட்டி விட்டு, மாற்றத்தை கோரினர்.

தொடர்ச்சி P2

398 பயணிகளுடன் மத்தளையில்

# தரையிறங்கியது ‘ரெட் விங்ஸ்’





ரஷ்யாவின் ‘ரெட் விங்ஸ்’ விமான நிறுவனம், இலங்கைக்கான விமான சேவையை வியாழக்கிழமை (29) ஆரம்பித்துள்ள நிலையில், ரெட் விங்ஸின் முதலாவது விமானம் 398 பயணிகளுடன் வியாழன் காலை 9.48 மணிக்கு மத்தல சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியது.

2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் விமானங்களை சேவையில் ஈடுபடுத்த ‘ரெட் விங்ஸ்’ நிறுவனம் திட்டமிட்டுள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை மற்றும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் தெரிவித்துள்ளன.

எனினும், அடுத்த வாரம் முதல் மத்தல விமான நிலையத்துக்கான வாராந்த விமானங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுவதாக மொஸ்கோவில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கோவையில் சிக்கினார் சஹ்ரானின் சகபாடி

இலங்கையில் 250 க்கும் மேற்பட்ட உயிர்களை காவு கொண்ட ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பின் முக்கிய புள்ளியான மௌலவி சஹ்ரானுடன் ஐஎஸ் உறுப்பினர் ஷேக் ஹிதாயத்துல்லா தொடர்பில் இருந்ததாக விடயத்தை நன்கு அறிந்த புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்ததாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை குண்டுவெடிப்புகளுக்கு முன்னர், ஹிதாயத்துல்லா மற்றும் சஹ்ரான் ஆகியோர் பேஸ்புக் பக்கமான "கிலாஃபாஹ்ஜிஎஃப்எக்ஸ்" மூலம் தொடர்பில் இருந்தனர் என்று தேசிய புலனாய்வு பிரிவினால் 2019 ஆம் ஆண்டு ஹிதாயத்துல்லாவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

2022ஆம் ஆண்டு பெப்ரவரியில் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வனப்பகுதியின் ஆசனூர் மற்றும் கடம்பூர் பகுதிகளில் உள்ள வனப்பகுதியின் உட்பகுதியில் குற்றவியல் சதித்திட்டத்தில் சந்தேகநபர்கள் ஈடுபட்டமை விசாரணையில் தெரியவந்துள்ளது என்று தேசிய புலனாய்வு அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் கைது செய்யப்பட்ட குற்றவாளியான உமர் ஃபாரூக் தலைமையில், கோவை குண்டுவெடிப்பில் உயிரிழந்த ஜமீஷா முபீன், முகமது அசாருதீன், ஷேக் ஹிதாயத்துல்லா மற்றும் சனோபர் அலி ஆகியோருடன் கூட்டங்களில் பங்கேற்றதாகவும் அவர்கள் பயங்கரவாதச் செயல்களுக்குத் தயாராகவும் செயல்படுத்தவும் சதி செய்ததாகவும் தெரியவந்துள்ளது.

2019 தாக்குதல் குறித்து விசாரிக்கப்பட்டு வந்த நிலையில், காரொன்றில் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் ஜமீஷா முபீன் 2021ஆம் ஆண்டு ஒக்டோபர் 23ஆம் திகதியன்று கோவை உக்கடத்தில் உள்ள கோட்டை ஈஸ்வரன் கோயிலுக்கு அருகே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர், குண்டுவெடிப்பு வழக்கில் முதன்மை குற்றவாளியாக பதிவு செய்யப்பட்டதுடன், குறித்த வழக்கில் மாநில பொலிஸார் கடுமையான சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தை செயல்படுத்திய நிலையில், வழக்கு தேசிய புலனாய்வு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது.

2017 முதல் ஐஎஸ் சித்தாந்தத்தைப் பிரச்சாரம் செய்து வரும் ஹிதாயத்துல்லா, அசாருதீனுடன் 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கைது செய்யப்பட்டு, 2020 ஆம் ஆண்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இலங்கை குண்டுவெடிப்பு வழக்கில் சிறையில் அடைக்கப்பட்ட உக்கடத்தைச் சேர்ந்த அசாருதீன் தற்போது கேரளா-தமிழ்நாடு ஐஎஸ் தொகுதியின் தலைவராக செயற்பட்டுள்ளார்.

252 பேர் கொல்லப்பட்ட இலங்கை குண்டுவெடிப்புகளுக்கு மூளையாக செயல்பட்ட சஹ்ரானினால் ஈர்க்கப்பட்ட அசாருதீன், அந்த நேரத்தில் இரண்டு தென்னிந்திய மாநிலங்களில் இதேபோன்ற தாக்குதல்களை நடத்த திட்டமிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நேற்று ரூ.400 கோடி; இன்று ரூ. 200 கோடி

இந்தத் திட்டத்தின் கீழ், 4 பில்லியன் ரூபாய் விவசாயிகளின் கணக்கில் வியாழன் (29) வரவு வைக்கப்பட்டதுடன், இன்று (30) 2 பில்லியன் ரூபாயும் மீதமுள்ள 2 பில்லியன் ரூபாய் ஜனவரி 1ஆம் திகதிக்குப் பின்ன விவசாயிகளின் கணக்குகளுக்கு வரவு வைக்கப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இரண்டு வாரங்களுக்குள், அனைத்து நெல் விவசாயிகளுக்கும் தொடர்புடைய நிதி அவர்களின் சொந்தக் கணக்கில் வரவு வைக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கோரிக்கைக்கு அமைய மேற்குறிப்பிட்ட நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி ஒதுக்கியிருந்தது.

கடந்த பெரும்போக அறுவடையின் போது ஏற்பட்ட பாதிப்புகளை கருத்திற்கொண்டு, ஆசிய அபிவிருத்தி வங்கியினால் 08 பில்லியன் ரூபா நிதி உதவி இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு ஹெக்டேயர் வயல் நிலத்தை கொண்ட விவசாயிகளுக்காக 10,000 ரூபாய் மற்றும் 02 ஹெக்டேயர் வயல் நிலத்தை கொண்ட விவசாயிகளுக்காக 20,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

## ஸ்ரீலங்கா சுதந்திர...

டிசம்பர் 31 கதிர்காமம் கிரிவெஹர தினத்தை முன்னிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 60 ஆவது தடவையாக நடத்தும் பிரித் பிங்கம பற்றி அறிவிக்க விவசாய அமைச்சு ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உண்மையான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி எம்மிடமே உள்ளது. நாங்கள் இன்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்காரர்களாகவே உள்ளோம். எனினும் கட்சியின் செயலாளர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வரலாறு தெரியாது பேசுகின்றார். அவருக்கு கட்சி பற்றிய தெளிவு இல்லை, அவர் பல கட்சிகளில் அங்கம் வகித்தவர் என்ற படியால் எமது கட்சி பற்றி அனுபவ ரீதியிலான தெளிவு அவருக்கு இல்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார். டிசம்பர் 31 கதிர்காமம் கிரிவெஹர தினத்தை முன்னிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 60 ஆவது தடவையாக நடத்தும் பிரித் பிங்கம எமது கட்சியினால் தான் நடத்தப்படும். இதில் சகலரும் கலந்துகொள்ள முடியும். அதற்கான அழைப்பை விடுத்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## இறுதி நாளாகும்...

கல்வி நிர்வாக சேவை, ஆசிரியர் மற்றும் அதிபர் சேவைகள், முப்படைகள் உட்பட இலங்கை நிர்வாக சேவையில் இருந்து பலர் ஓய்வு பெறுகின்றனர் என்றும் இலங்கை வரலாற்றில் ஒரே நேரத்தில் பாரிய அளவான அரச ஊழியர்கள் ஓய்வு பெறுவது இதுவே முதல் முறை என்று தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

நாளை சனிக்கிழமையுடன் (31) ஓய்வு பெற்றுபவர்களில் கணிசமான எண்ணிக்கையிலான அரச அதிகாரிகளும் உயர் பதவிகளை வகிப்போரும் உள்ளடங்குவதாகவும் தெரியவருகிறது.

## 57 இலட்சம் இலங்கையருக்கு...

தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் நாட்டிலுள்ள 11 சதவீதமான குடும்பங்கள் வருமானத்தை இழந்துள்ளதாகவும் சங்கம், வருமான மட்டம் 62 சதவீதமாக குறைவடைந்துள்ளதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சனத்தொகையில் 49 இலட்சம் மக்கள் உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளதுடன், 5 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் போசணைக் குறைபாட்டை எதிர்கொள்வதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## குடிநீர் குழாய் திருடிய சகோதரர்களுக்கு 'கூடு'

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் தங்காலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## மார்ச் 10க்கு முன் சின்னத் தேர்தல்

பொலிஸ் மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள், தபால் மா அதிபர், அரச அச்சக அலுவலர் உள்ளிட்டோர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் ஆலோசிப்பதற்காகவே இந்த சந்திப்பு நடத்தப்பட்டதாக ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை கோரும் வர்த்தமானி அறிவித்தல் 2023 ஜனவரி 5 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என அவர் குறிப்பிட்டதுடன், தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்களின் பெயர்கள் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்]

## இன்றும் நாளையும் விசேட டெங்கு ஒழிப்பு

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 75,434 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இது இரு மடங்கை விட கூடுதலான அதிகரிப்பாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாளாந்தம் 200 முதல் 300 வரையான டெங்கு நோயாளிகள் அடையாளம் காணப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவதுடன், ஜனவரி மாதத்தில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

டெங்கு அபாய வலயங்களாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, புத்தளம், பதுளை மற்றும் கேகாலை ஆகிய 09 மாவட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது சுற்றுச்சூழல் மற்றும் பொது இடங்களில் நுளம்புகள் பரவக்கூடிய இடங்களை அகற்றுவதன் மூலம் டெங்கு நுளம்புகள் பரவுவதைத் தடுக்க முடியும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எதிர்வரும் 02ஆம் திகதி பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளமையினால், பாடசாலை சூழலை சுத்தப்படுத்துவதற்காக அதிபர்களின் தலைமையில் வேலைத்திட்டமொன்றை உருவாக்குமாறு பணிப்பாளர் நாயகம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## கறுப்பு போராட்ட வாரமாக ஜனவரி இறுதி பிரகடனம்

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் 20,000 வைத்தியர்களிடம் கையெழுத்து சேகரிக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி ஜனவரி 10ஆம் திகதி கையொப்பமிடப்பட்ட மனு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட உள்ளது.

## சுதந்திர கட்சி தலைமையில் புதிய கூட்டணி உருவாகும்

அது தொடர்பான ஆரம்ப பேச்சுவார்த்தைகள் முடிவடைந்துள்ளன. எவ்வாறாயினும் ஜனவரி முதல் வாரத்தில் புதிய கூட்டணியை அறிவிக்க எதிர்பார்க்கிறோம். அடுத்த தேர்தலிலும் கூட்டணியாக போட்டியிடுவோம் எனக் கூறினார். பாராளுமன்றத்தில் சுயாதீனமாக உள்ள அணியினர், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் சில உறுப்பினர்களும் இணைவார்கள். அத்துடன் ஏனைய கட்சிகள், சுயாதீன குழுக்கள் என பலர் எம்முடன் இணைய இணக்கம் தெரிவித்துள்ளனர். எவ்வாறு இருப்பினும் தேர்தலை பிற்போட அரசாங்கம் பல்வேறு சூழ்ச்சிகளை செய்து பார்க்கின்றது. அதற்கான பல சாட்டுக்களையும் கூறி வருகின்றனர். பணம் இல்லை என்கின்றனர், பணம் இல்லை என தேர்தலை பிற்போட முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

## அட்டைகளை ஜனவரி 1 முதல் ஒன்லைனில் நிரப்பலாம்

இது பயணிகளுக்கு எந்தவித சிரமமும் இன்றி குடிவரவு மற்றும் குடியகல்வு செயற்பாடுகளை முடிக்க உதவுகிறது என்று திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## 'கை'யை கைவிட்டோருக்கு கைகோர்க்கும் வாய்ப்பு

மாற்றங்களை கோரிய மக்களுக்கு தற்போது ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை கூட தெரிவு செய்ய முடியாத கட்சி ஒன்றின் தலைவருக்கு கீழ் அனுபவித்ததை விட துன்பங்களை அனுபவிக்க நேரிட்டுள்ளது" என்றார்.

பல காரணங்களின் அடிப்படையில் எமது கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர் எனவும் தேர்தல் நடத்தப்பட்டால், இவர்களுக்கு ஏற்படும் நிலைமையை காண முடியும் எனவும் தெரிவித்தார்.

தமது அதிகாரம் பறிப்போய்விடும் என்று அஞ்சுவோரே தேர்தல் வேண்டாம் என கூறுகின்றனர் என்று குறிப்பிட்ட அவர், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பல துண்டுகளாக பிரிந்து தேர்தலை எதிர்கொள்ள முடியாத அச்சத்தில் பல கதைகளை கூறி தேர்தலை ஒத்திவைக்க முயற்சித்து வருகிறது என்றார்.

## தரையிறங்கியது ரெட் விங்ஸ்

டிசம்பர் 26, 2022 அன்று, ரஷ்ய கூட்டமைப்புக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் ஜனிதா ஏ. லியனகே மற்றும் குழுவினர் ரெட் விங்ஸின் வணிக இயக்குநர் இகோர் ட்ரெட்டியாகோவ் மற்றும் பகுப்பாய்வுத் துறைத் தலைவர் மரினா புசினா ஆகியோருடன் இறுதி சம்பிரதாயங்களைப் பற்றி கலந்துரையாடினர்.

ஆரம்பத்தில் ரெட் விங்ஸ் ரஷ்யாவில் உள்ள முன்னணி சுற்றுலா நிறுவனங்களுடன் இணைந்து வாரத்திற்கு இருமுறை இலங்கைக்கான பட்டய சேவைகளை இயக்கும், அதன் பின்னர் வழக்கமான விமானங்களை இயக்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

**“ நாட்டின் சுற்றுலாத்துறையை புத்துயிர் பெற விமான சேவைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்று தூதரகம் தெரிவித்தது**

இந்த கடினமான நேரத்தில் இலங்கைக்கு ஒரு முக்கியமான சுற்றுலா போக்குவரத்து ஆதாரமாக ரஷ்யாவை கருத முடியும் என்பதால், நாட்டின் சுற்றுலாத்துறையை புத்துயிர் பெற விமான சேவைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்று தூதரகம் மேலும் தெரிவித்தது.

அஸூர் ஏர் மற்றும் ஏரோஃப்ளோட் நிறுவங்களுக்கு அடுத்த படியாக ரெட் விங்ஸ் நிறுவனத்தின் இலங்கைக்கான விமான சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், ரஷ்யா மற்றும் இலங்கைக்கு இடையிலான நேரடி விமான சேவைகளின் எண்ணிக்கை மூன்றாக உயர்ந்துள்ளது.

## தமிழ் தலைவர்களால் தமிழர்களுக்கு தீர்வைப் பெற்றுத் தர முடியாது

க. அகரன்

தற்போது இருக்கின்ற தமிழ் தலைவர்களால் தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுத் தர முடியாது. தமிழரசுக் கட்சி தனித்து போட்டியிட விரும்பினால் அவர்கள் போகட்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளில் ஒன்றான ரெலோவின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் சமத்துவ கட்சியின் வன்னிக்கான அலுவலகத் திறப்பு விழாவில், புதன்கிழமை (28) கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மைய காலங்களில் நான் சர்ச்சையில் இருந்து கொண்டிருக்கின்றேன். சிலர் ஏற்றுக் கொண்டு சில அறிவுரைகள் கூறுகிறார்கள். ஆனாலும் சிலர் அதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். இந்தக் கூட்டத்திற்கு வருவதற்கு முன்னர் சிந்தித்தேன். வன்னி மாவட்டத்தில் புதிதாக ஒரு கட்சி கால் ஊன்றுகின்றது. நானும் ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவன் என்ற வகையில் எனது கட்சிக்கும் அந்தக் கட்சி ஒரு போட்டியான செயற்பாடு தான். அந்தப் போட்டிக்கு, எங்களுடன் மோதுவதற்கு தயாரான கட்சியின் நிகழ்வில் கலந்து கொண்டு அந்தக் கட்சிக்கு ஆதரவான கருத்தை சொல்லிவிட்டு போட்டி ஏற்படுகின்ற போது அதன் தாக்கத்தை எப்படி எதிர் கொள்வது என்று சிந்தித்தேன். அசோக் தோழர் (சந்திரகுமார்) பல கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருப்பார். ஆனால் இங்கு இரண்டாம், மூன்றாம் கட்ட தலைவர்களே வந்துள்ளார்கள். வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் நான் ஒருவன் மட்டும் இருக்கின்றேன். வடக்கு கட்சி தலைவர்களும் இல்லை. ஒரு காலத்தில் நானும் சந்திரகுமார் அவர்களும் தமிழ் மக்களின் விடுதரைலக்காக, உரிமைக்காக ஒரே காலத்தில் ஆயுதமேந்திப் போராடியவர்கள். அந்தப் போராட்டத்தின் வலி அல்லது அந்த விடுதலை இலக்கை அடைய முழு மூச்சாக செயற்பட்டவர்கள். நாங்கள் அரசியலுக்கு வருவோம் என்று எந்தச் சந்தர்ப்பத்திலும் நினைத்து பார்க்கவில்லை. ஆனால் எங்களுடைய போராட்டங்களில் கடந்த காலங்களில் இடம்பெற்ற கசப்பான சில நிகழ்வுகளால் நாங்கள் அரசியலுக்குள் நுழைவது, பாராளுமன்றத்திற்கு செல்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

அது மட்டுமல்ல, என்ன நோக்கத்திற்காக நாங்கள் ஒரு காலத்தில் புறப்பட்டோமோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை. அந்த நேரத்தில் அரசியல் விடுதலையை தனி நாடு என்று எண்ணியிருந்தாலும் கூட, அதற்கு பிற்பாடு தமிழ் மக்களின் விடுதலை, தமிழ் மக்களின் சுதந்திரம், அரசியல் விடுதலை என்பவற்றைப் பெற வேண்டுமாக இருந்தால் நாங்கள் இந்த போராட்ட களத்தை விட்டு விலகிச் செல்ல முடியாத ஒரு சங்கடத்திற்குள் தான் நாம் இருக்கின்றோம்.

இதன் காரணமாக தான் சந்திரகுமார் அவர்கள் இந்த கட்சியை பல இடர்பாடுகளுக்கு மத்தியில் உருவாக்கி கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு போட்டியாக சவால் மிக்க ஒரு கட்சியாக வளர்த்துள்ளார். அதனை நான் மறுக்கவல்லை. அரசியல் ரீதியாகவும் போட்டிகள் இருக்க வேண்டும். அதனை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அந்த போட்டியின் இறுதி இலக்கு மக்களின் விடுதலை என்பதாக இருக்க வேண்டும். ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் தற்போது ஒரு ஐயப்பாடு இருக்கின்றது. தமிழ் மக்கள் மத்தியில் கட்சிகள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது.

தமிழ் தேசியம் என்று பெயரளவில் இயங்கிக் கொண்டிருக்கின்ற சில கட்சிகளுக்கு கூட தேர்தல் திணைக்களம் இன்னும் அங்கீகாரம் வழங்கவில்லை. அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம். ஆனால் சமத்துவ கட்சி பதிவு செய்யப்பட்டு விட்டது. அங்கீகாரம் பெற முடியாத நிலையில் நாம் இருக்கின்றோம் என்றால் இவ்வாறு அதிகரித்த கட்சிகள் தேவையா?

ஒரு காலத்தில் நாங்கள் எல்லோரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக செயற்பட்டவர்கள். திடீரென ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கட்சி. நான் கூட புதிய கட்சியை தொடங்கினால் எனக்கும் அங்கத்துவம் கிடைக்கும் என நினைத்ததுண்டு.

போதைப்பொருள் அச்சுறுத்தலை இல்லாதொழிக்க

# பொது மக்களிடமிருந்து ஆதரவு அத்தியாவசியம்

### நீதி அமைச்சர் விஜயதாச தெரிவிப்பு

தற்போது இலங்கை முழுவதும் பரவி வரும் ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருள் அச்சுறுத்தலை இல்லாதொழிக்க அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும், அப்பாவி ஏழை இளைஞர்களை போதைப்பொருளுக்கு பயன்படுத்தும் போதைப்பொருள் கடத்தல்காரர்களை ஒடுக்க வேண்டுமெனவும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



சிறைச்சாலை திணைக்களம் ஒரு நாட்டின் நல்வாழ்வுக்கு இன்றியமையாத திணைக்களம் என்பதனால் இலங்கையில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் பணியில் சிறைச்சாலை திணைக்களம் ஆற்றிவரும் சேவை சிறப்பானது. எனவே அரச சேவையில் இணைந்த புதிய சிறைக்காவலர்கள் மற்றும் அதிகாரிகள் அவர்களின் திறமைகள் மற்றும் திறன்கள் ஒரு கௌரவமான சேவையை செய்யும் நம்பிக்கை இருப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். சிறையில் அடைக்கப்பட்டுள்ள எந்த ஒரு நபரையும், அவர் செய்த குற்றம் அல்லது அவருக்கு என்ன தண்டனை கிடைத்தாலும் அவர்களை நன்றாக கவனித்துக் கொள்வது சிறை அதிகாரிகளின் பொறுப்பாகும், மேலும் சிறை அதிகாரிகளின் கடமை அனைத்து கைதிகளையும் சமமாக கருதி அவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

1934-க்குப் பின்னர், பாரம்பரிய சிறை நடைமுறைகளை மாற்றி, சிறை விதிமுறைகள் மற்றும் உத்தரவுகளை மாற்றி, தண்டனை என்ற கருத்தை நீக்கி, சிறைத்துறையை மறுவாழ்வு அமைப்புக்கு இயக்கி, புதிய அமைப்பை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, நீதி அமைச்சகம், சிறை. விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தம் புதிய புனர்வாழ்வு பணியகம் ஒன்றை நிறுவியுள்ளது.அடுத்த சில மாதங்களில் சட்டமூலம் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார். தற்போது இலங்கை முழுவதும் பரவி வரும் ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருள் அச்சுறுத்தலை இல்லாதொழிக்க அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும், அப்பாவி ஏழை இளைஞர்களை போதைப்பொருளுக்கு பயன்படுத்தும் போதைப்பொருள் கடத்தல்காரர்களை ஒடுக்க வேண்டுமெனவும், இதற்கிடையில், போதைப்பொருள் அச்சுறுத்தலை அடக்குவதற்கு பொது மக்களிடமிருந்து ஆதரவு அத்தியாவசியமானது எனவும் நீதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தேர்தலை பிற்போடவே அரசாங்கம் முயலுகின்றது



ஏதேனும் குளறுபடிகளை செய்தேனும் தேர்தலை பிற்போடவே அரசாங்கம் முயற்சிக்கிறது. அதற்கான வாய்ப்புகள் இனியும் இருக்காது என தெரிவிக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, வெறும் 10 பில்லியன் ரூபாய்களை ஒதுக்க முடியாது என்றால், அடுத்த ஆண்டுக்காக 7,300 பில்லியன் ரூபாய்களை எவ்வாறு அரசாங்கம் தேடப்போகின்றது எனவும் கேள்வி எழுப்பினார்.

தேர்தலை நடத்துவதற்கான தீர்மானம் எடுக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கிடைத்துவிட்டது. ஆனால் இன்னமும் தேர்தலை நடத்தாது நாள்களை கடத்திக்கொண்டுள்ளனர். இந்த ஆண்டு முடிந்துவிட்டது, இனியும் காலத்தை கடத்த முடியாத நிலையில் ஜனவரி மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் வேட்புமனு தாக்கல் திகதியை அறிவிப்போம் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இவ்வாறான நிலையில் தான் ஜனவரி மாதம் 5ஆம்திகதி அவசரமாக பாராளுமன்றத்தை கூட்ட தீர்மானித்துள்ளனர். ஜனவரி 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்ட பாராளுமன்றத்தை ஏன் 5ஆம் திகதி கூட்ட வேண்டும்? 5ஆம் திகதி ஏதேனும் குளறுபடிகளை செய்து தேர்தலை பிற்போட முடியுமா என்றே இவர்கள் முயலுகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

இப்போது தேர்தலை நடத்த பணம் இல்லை என கூறுகின்றனர். அடுத்த ஆண்டுக்கான அரச செலவீனம் 7,300 பில்லியன் ரூபாயாகும். ஆனால் தேர்தலுக்கு வெறும் 10 பில்லியன் ரூபாய் செலவாகும். வெறும் 10 பில்லியன் ரூபாயை ஒதுக்க முடியாது என்றால் அடுத்த ஆண்டுக்காக 7,300 பில்லியன் ரூபாயை எவ்வாறு அரசாங்கம் தேடப்போகின்றது. சட்ட ரீதியாக செய்ய வேண்டிய அனைத்தையும் செய்து முடிக்கப்பட்டுள்ளது. எனவே தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்புகளே அதிகமாக உள்ளது என்றார்.

## ஸ்ரீ ஐயப்ப சுவாமி விசேட மண்டல பூஜை

களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய 14வது ஸ்ரீ ஐயப்ப சுவாமி விசேட மண்டல பூஜை பெரு விழா எதிர் வரும் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி முற்பகல் 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையிலான காலப்பகுதியில் நடைபெறும். இதன் போது சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி, சபரிமலை குரு முதல்வர் ஆன்மீக அருள் ஜோதி மகாராஜகுரு ஐயப்பதாச சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமை தாங்குவதுடன் சிறப்பு ஆசி வழங்குவார்.

ஐயப்ப பக்த அடியார்கள் அனைவரும் இப் பூஜையில் கலந்துக் கொண்டு ஐயப்பனின் அருளாசி பெற்றுக் கொள்ளுமாறு ஐயப்ப சுவாமிகள் மற்றும் களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய தொண்டர் சபையினர் கேட்டுக் கொள்கின்றனர்.




படம்: (சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி, சபரிமலை குரு முதல்வர், ஆன்மீக அருள் ஜோதி மகாராஜகுரு ஐயப்பதாச சாம்பசிவ சிவாச்சாரியார்)

தகவல் - நா. ஜெயரட்ணம்

போதைப்பொருள் வியாபாரிகளுக்கு

## மரண தண்டனை வழங்க வேண்டும்

பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் பரவல் அதிகரித்துள்ளது என்பதை விஞ்ஞான ரீதியாக சுட்டிக்காட்ட வேண்டும். அதேபோல் பாடசாலை மாணவர்களை போதைப் பொருள் ஆபத்தில் இருந்து காப்பாற்ற பிரதான போதைப் பொருள் வியாபாரிகளுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என சிறுவர் மற்றும் பெண்கள் விவகார ராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.



போதைப் பொருள் பாவனையில் இருந்து பிள்ளைகளை பாதுகாக்க பாடசாலைகளின் சோதனை நடத்தப்பட்டாலும் பாடசாலைக்குள் போதைப் பொருள் செல்லும் வழியை தடுக்க வேண்டும். மிகப் பெரிய அளவில் போதைப் பொருள் சுற்றிவளைப்பு தேடுதல்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். கைப்பற்றிய போதைப் பொருளுக்கு என்ன நடந்தது என்பதை வெளியிடும் பொறுப்பு பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பணியகத்திற்குரியது எனவும் அவர் கூறியுள்ளார்.

பாடசாலை மாணவர்கள் தற்போது ஆபத்தான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர். நாட்டுக்குள் போதைப் பொருள் வருவதை தடுக்க வேண்டுமாயின் வான் மற்றும் கடல் வழியாக வருவதை தடுக்க வேண்டும். கைப்பற்றப்படும் போதைப் பொருட்கள் பல வழிகளில் மீண்டும் வெளியில் செல்கிறது. அவை மீண்டும் நாடு முழுவதும் பரவி பிள்ளைகளின் கைகளுக்கு செல்கிறது எனவும் ராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

## வீடுகளை டொலருக்கு விற்பதால் நல்ல வருமானம்

நகர அபிவிருத்தி அதிகார சபையின் நடுத்தர வருமான வீடுகள் டொலருக்கு விற்கப்படும் திட்டத்தின் கீழ் 500,000 அமெரிக்க டொலருக்கு மேல் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

தற்போது 11 வீடுகள் டொலருக்கு விற்கப்பட்டுள்ளது என நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. துபாய், அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஓமான் கத்தார், பிஜி தீவுகளில் வசிக்கும் இலங்கையர்கள் இந்த வீடுகளை வாங்கியுள்ளனர். வீடுகளுக்குரிய பணத்தை மொத்தமாக செலுத்துவதால் 10 சதவீதம் விலைக்கழிவும் கிடைக்கும்.

வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு இந்த வீடுகளை கொள்வனவு செய்ய முடியுமாக இருந்தால், இலங்கை மத்திய வங்கியின் முன்மொழிவுக்கு ஏற்ப திறக்கப்படுகின்ற விசேட கணக்கு ஒன்றாகிய உள்நோக்கிய முதலீட்டு கணக்குகளை (INWARD INVESTMENT ACCOUNT) திறப்பதன் ஊடாக செயற்படுத்தலாம்.

www.uda.gov.lk ஐப் பார்வையிடுவதன் மூலம் மேலதிக தகவல்கள் மற்றும் தேவையான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 077-7794016 என்ற அலைபேசி இலக்கத்திற்கு அழைப்பதன் மூலமும் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ் கோட்டை அழகானது

### சீன துணைத்தூதுவர் குழு யாழ் விஜயம்

சீன துணைத் தூதுவர் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் (28) யாழ்ப்பாணம் கோட்டைக்கு விஜயம் செய்திருந்தனர். அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளுக்கும் அவர்கள் சென்றிருந்தனர். இந்த விஜயத்தின் பின் யாழ் கோட்டை அழகானது எனவும் தூதுவர் தலைமையிலான குழுவினர் தெரிவித்துள்ளனர்.





நேற்று முதல் மத்தள ராஜபக்ஷ விமான நிலையம்

## இரண்டாவது சர்வதேச விமான நிலையமாகியது

இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமாக நிர்மாணிக்கப்பட்ட மத்தள ராஜபக்ஷ விமான நிலையம் நேற்று (29) முதல் மீண்டும் சர்வதேச நடவடிக்கைகளுக்காக இயங்க ஆரம்பித்தது.

கடந்த காலங்களில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு மாற்று விமான நிலையமாகவும், வான்வெளிக்கு மேலே பறக்கும் விமானங்களை அவசரமாக தரையிறக்கும் விமான நிலையமாகவும் மத்தள பயன்படுத்தப்பட்டது.

> **“ கடந்த காலங்களில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு மாற்று விமான நிலையமாகவும், வான்வெளிக்கு மேலே பறக்கும் விமானங்களை அவசரமாக தரையிறக்கும் விமான நிலையமாகவும் மத்தள பயன்படுத்தப்பட்டது**

இந்நிலையில், ரஷ்யாவில் இருந்து 400க்கும் மேற்பட்ட பயணிகளுடன் இந்த நாட்டிற்கு வருகை தந்த ரெட்விங்ஸ் விமான நிறுவனம், புத்தாண்டு முதல் வாரத்திற்கு 2 புதிய விமானங்களை இயக்க உள்ளது, மேலும் இது 3 ஆக அதிகரிக்கப்பட உள்ளது.

அதற்காக, வெளிநாட்டு விமான நிறுவனத்திற்கு வழங்கப்படும் FAOC (Foreign Aircraft Operator Certificate) சான்றிதழை பணிப்பாளர் ஜெனரல் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி பி.ஏ. ஜெயகாந்தனால் இந்த விமான சேவையின் உள்ளூர் இணைப்பாளராக இருக்கும் LSR நிறுவனத்தின் தலைவர் திலக் வீரசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நாட்டை சிறந்ததொரு நிலைக்கு கட்டியெழுப்ப

## அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம்

நாடு மீளக் கட்டியெழுப்பப்படும் போது, அதை விரும்பாத பல தீவிரவாதிகளுக்கு அது வலியை ஏற்படுத்தும். எத்தகைய தடைகள் வந்தாலும் நாட்டின் எதிர்காலத்திற்காக நாம் முன்னேறிச் செல்ல வேண்டும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.



நேற்று (29) கொழும்பு தேசிய நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்னவினால் எழுதப்பட்ட ‘பல ரங்கனய’ நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் தினேஷ் குணவர்தன இதனை தெரிவித்தார்.

இந்த நேரத்தில் நாட்டைப் பற்றி யதார்த்தமாக சிந்திக்க வேண்டும். புதிய தலைமுறையினரின் கருத்துகளுக்கு செவி சாய்ப்பது அவசியம். அவர்கள் சொல்வது போல் வீண்விரயம் தவிர்க்கப்பட வேண்டும். இந்நூல் தற்போதைய சமூகம், ஆட்சிமுறை, மனித நற்பண்புகளின் வீழ்ச்சி மற்றும் கடந்த காலங்களில் மாணவர் இயக்கங்கள் எதிர்கொண்ட நிலைமைகள் பற்றி பேசுகிறது.

நாடு மீளக் கட்டியெழுப்பப்படும் போது, அதை விரும்பாத பல தீவிரவாதிகளுக்கு அது வலியை ஏற்படுத்தும். எத்தகைய தடைகள் வந்தாலும் நாட்டின் எதிர்காலத்திற்காக நாம் முன்னேறிச் செல்ல வேண்டும். மக்கள் பாதிப்புக்குள்ளாக வேண்டும் என்பதே அவர்களது விருப்பமாகும். வன்முறை தற்காலிகமானது. மக்கள் ஒவ்வொரு முறையும் அதனை நிராகரித்தே வந்திருக்கின்றார்கள்.

வன்முறையிலிருந்து விலகி ஜனநாயகத்திற்கும் கலந்துரையாடலுக்கும் முன்னுரிமை அளித்து செயற்படும் நிலை சமூகத்தில் உருவாகியுள்ளது. இந்நூலின் பயனுள்ள விடயங்களை வெற்றிபெறச்செய்ய ஒன்றிணைந்து செயற்படுவோம் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

## சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பி.எல்சி – ரத்து


2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 37(3) ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம், 2022 திசெம்பர் 28ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சிக்கு வழங்கப்பட்ட நிதித்தொழில் உரிமத்தினை இரத்துச்செய்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை தீர்மானித்துள்ளது. அதற்கமை, நிதித்தொழில் சட்டத்தின் கீழ் நிதித்தொழிலில் ஈடுபடுவதற்கு 2022 திசெம்பர் 28 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சி அனுமதிக்கப்படாது. மேலும், 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனமொன்றாக சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் பதிவுச் சான்றிதழை இரத்துச்செய்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் தீர்மானித்துள்ளார்.

“வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையினை ஒருங்கிணைப்பதற்கான முதன்மைத் திட்டத்தின்” பணிப்புரைகளுக்கமைவாக சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் எஞ்சியுள்ள வைப்பாளர்களுக்கு மீள்கொடுப்பனவு செய்வதற்கு எஸ்எம்பீ பினான்ஸ் பிஎல்சிக்கு (அப்போதைய எஸ்எம்பீ லீசிங் பிஎல்சி) மூலம் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பின் நோக்கில், சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் கோரப்படாத வைப்புப் பொறுப்பானது தொடர்புடைய சொத்துக்கள் பெறுமதி மற்றும் தொடர்புடைய வைப்பாளர் தகவல்கள் என்பவற்றுடன் சேர்த்து எஸ்எம்பீ பினான்ஸ் பிஎல்சிக்கு மாற்றல் செய்யப்படும்.

வாழைச்சேனை பிரதேச சபை

# பட்ஜட் இரண்டாவது தடவை தோல்வி

எம்.எம் அஹமட் அனாம்



கோறளைப்பற்று (வாழைச்சேனை) பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நான்கு வாக்குகளால் இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டது.

2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்ட அமர்வு, இரண்டாவது முறையாக தவிசாளர் திருமதி சோபா ஜெயரஞ்சித் தலைமையில் நேற்று (29) சபை மண்டபத்தில் நடைபெற்றது.

14.12.2022 அன்று சமர்பிக்கப்பட்ட வரவு - செலவு திட்டம் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, தவிசாளரால் மீண்டும் வரவு - செலவு திட்டம் சமர்பிக்கப்பட்டது. இதன்போது, வரவு - செலவு திட்ட வாசிப்புக்கு ஆதரவாக ஒன்பது வாக்குகளும் எதிராக 13 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆறு உறுப்பினர்களும் ஐ.தே.கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினரும் சுயேட்சை உறுப்பினர் ஒருவரும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி உறுப்பினர் ஒருவருமாக ஒன்பது பேர் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். தமிழ் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர் அமர்வுக்கு சமூகமளித்திருக்கவில்லை.

தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஆறு பேரும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் மூன்று பேரும் ஐ.தே.க உறுப்பினர்கள் இருவரும் நல்லாட்சிக்கான இயக்க உறுப்பினர் ஒருவரும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியைச் சேர்ந்த ஒருவரும் என 13 பேர் திட்டத்துக்கு எதிராக வாக்களித்திருந்தனர்.

இச்சபையானது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.





தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட நிவாரண அரிசி

# பதுக்கி வைப்பு

## பழுதடைந்த நிலையில் மீட்பு; விசாரணைகள் ஆரம்பம்

க. அகரன்

வவுனியா, ஆசிகுளம் கிராம சேவகர் பிரிவில் உள்ள மதுராநகர் கிராமத்தில், அரச கட்டடமொன்றின் அறைக்குள் இந்தியா, தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட நிவாரண அரிசி பதுக்கி வைக்கப்பட்ட நிலையில், அப்பகுதி மக்களால் நேற்று முன்தினம் (28) கண்டுபிடிக்கப்பட்டது.

இவ் விடயம் தொடர்பாக, வவுனியா பிரதேச செயலாளருக்கு கிராம மக்களால் அறிவிக்கப்பட்ட நிலையில், நேற்று (29) மாவட்ட செயலக கணக்காய்வு உத்தியோகத்தர்கள், அனர்த்த முகாமைத்துவ பிரிவு உத்தியோகத்தர்கள், உதவி பிரதேச செயலாளர் தலைமையில் குறித்த பகுதிக்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர். குறித்த அரிசி பாவனைக்கேற்றதா என்பதை ஆராய, பொதுச் சுகாதார பிரசோதகர்களும் அங்கு பிரசன்னமாகி இருந்தனர்.

இதன்போது, 1,272 கிலோ கிராம் அரிசி பதுக்கி வைக்கப்பட்டிருந்ததுடன் இந்த அரிசி, தற்போது பயன்படுத்தும் நிலையில் இல்லை என்பதுவும் தெரியவந்தது.

அப்பகுதி மக்களுக்கு கருத்து தெரிவித்த உதவி பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தரின் பக்கம் பிழைகள் இருந்தாலும் கூட, பொது அமைப்புகளுக்கு தெரியாமல் இருக்கவில்லை. தனியே அரச உத்தியோகத்தர்களை வைத்து மட்டும் கிராமத்தை நிர்வகிக்கவில்லை. பொது அமைப்புகளுக்கும் அதற்கான பொறுப்புள்ளது. மக்கள் தங்கள் பிரச்சினையை உரிய தரப்புக்கு எடுத்துக் கூறியிருக்க வேண்டும். இதற்கான பொறுப்பை, பொது அமைப்புகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.

ரயில் நிலையத்திலிருந்து வாகனங்களில் கிராமங்களுக்கு பொருட்களை அனுப்பிய போது, மழை காரணமாக அரிசி மூடைகள் சில நனைந்தமையால் இந்த இடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டது என கிராம சேவகராலும் கிராம அபிவிருத்தி சங்கத்தாலும் தெரிவிக்கப்பட்டது.

# இரண்டு வயது குழந்தை பாலியல் துஷ்பிரயோகம்

கனகராசா சரவணன்

இரண்டு வயது எட்டு மாத பெண் குழந்தையான சித்தியின் மகளுக்கு, அலைபேசியில் ஆபாச படங்களைக் காட்டி, பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்ற 19 வயது இளைஞனை, ஜனவரி ஒன்பதாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று முன்தினம் (28) மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், சித்தியின் வீட்டில் தங்கி வாழ்ந்துவரும் குறித்த இளைஞன், கடந்த சில நாள்களுக்கு முன்னர், பெண் குழந்தையை தனது மடியில் வைத்து, அலைபேசியில் ஆபாசபடங்களை காட்டி வந்துள்ளதுடன், அந்தக் குழந்தை மீது பாலியல் சேட்டை விட்டுவந்த நிலையில், அவர்களது உறவுப் பெண் ஒருவர் கண்டு, குழந்தையின் தாயாரிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து குழந்தையும் தன் மீது மாமா இவ்வாறு நடந்து கொண்டதாக தாயாரிடம் தெரிவித்தது. இதையடுத்து, சகோதரியின் மகனுக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்ததன்பேரில் நபர் கைது செய்யப்பட்டார். பாதிக்கப்பட்ட குழந்தையும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில்

# டிஜிட்டல் ஹொஸ்பிட்டல் திட்டம்

ஏ.எச்.ஏ ஹுஸைன்



வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் 'டிஜிட்டல் ஹொஸ்பிட்டல்' அங்குரார்ப்பண நிகழ்வு, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் டொக்டர் ஜீ. சுகுணன் தலைமையில் நடைபெற்றது.

இத்திட்டத்தின் ஊடாக, வெளிநோயாளர் பிரிவின் அனைத்து நடவடிக்கைகளும் கணினி மயப்படுத்தி, கடதாசிப் பாவனையை நிறுத்துவதுடன் 'பார்கோட்' முறையிலான மருத்துவ அட்டையும் நோயாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

நோயாளி தொடர்பான சகல விவரங்களும் கணினியில் பதிவுசெய்யப்படுவதுடன், அவர்களின் ஆய்வுகூட பரிசோதனை முடிவுகள், சிகிச்சையின் விவரங்கள் அனைத்தும் கணினி மயப்படுத்தப்பட உள்ளமை சிறப்பம்சமாகும்.

இங்கு, டொக்டர் ஜீ. சுகுணன் கருத்து தெரிவிக்கையில், தமது நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஏனைய வைத்தியசாலைகளில் 35 வயதுக்கு மேற்பட்ட சாதாரண சுகதேகிகளை, பூரண பரிசோதனைக்கு உட்படுத்தி, அவர்களின் சுகாதார பதிவேடு கணினி மயப்படுத்துவதுடன் அவர்களைத் தொடர்ச்சியாக அவதானிக்கும் முறைமையும் உலக வங்கியின் அனுசரணையுடன் PSSP எனும் திட்டமொன்றையும் நடைமுறைப்படுத்தி வருவதாகவும், தொழில்நுட்ப வளர்ச்சியை உட்புகுத்துவதன் மூலமாக துல்லியம், விரைவு, இலாபகரமான வைத்திய சேவையை மக்களுக்கு தம்மால் வழங்க முடியும் எனவும் தெரிவித்தார்.





# மாந்தை கிழக்கு பிரதேச செயலக ஒளிவிழா

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் ஒளி விழா நேற்று முன்தினம் (28) பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஜே. வோல்டி சொய்சா தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண இறைவரித் திணைக்களத்தின் பிரதிஆணையாளர் எம். ஜேசுறெஜினோல்ட்டும் சிறப்பு விருந்தினர்களாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ந. ரஞ்சனாவும் மல்லாவி பங்குத்தந்தை அருட்திரு ரீ.பி யோன்சன் அடிகளாரும் கௌரவ விருந்தினராக மாந்தை கிழக்கு உதவி பிரதேச செயலாளர் எம். ஜெபமயூரனும் கலந்து சிறப்பித்தனர்.

சண்முகம் தவசீலன்



# சீன பதில் தூதுவர் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு விஜயம்

நிதர்சன் வினோத்

வடபகுதிக்கு வருகை தந்துள்ள சீன பதில் தூதுவர் ஹூ வோய், தலைமையிலான குழுவினர், சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு நேற்று (29) விஜயம் செய்து கல்லூரிக்கான உதவித்திட்டங்களை வழங்கி வைத்தனர்.

கல்லூரிக்கு வருகை தந்த சீன பதில் தூதுவர் தலைமையிலான குழுவினர் பாண்ட் வாத்திய இசையோடு வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

இதன்போது, 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்களும் திறன் வகுப்பறைக்கான உபகரணங்களும் பாடசாலைச் சமூகத்திடம் கையளிக்கப்பட்டன.

இதேவேளை, நேற்று முன்தினம் (28) சீன தூதரகத்தின் பிரதிநிதிகள் குழுவினர் யாழ்ப்பாணக் கோட்டைக்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காணவில்லை

க. சரவணன்



கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள படையாண்டவெளியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயார், கடந்த 22ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார் எனவும் இவர் தொடர்பான தகவல்கள் தெரிந்தால், உடனடியாக 065-2056-936 என்ற கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலைய தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்குமாறும் பொலிஸார் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய, சடாச்சரம் தேவலஷ்மி என்பவரே காணமால்போயுள்ளார். இவரின் கணவர் வெளிநாட்டில் வேலைபார்த்து வரும் நிலையில், தனது மகனுடன் வாழ்ந்துவந்துள்ளார். வியாழக்கிழமை (22) வீட்டில் இருந்து வெளியேறிய நிலையில், இதுவரை வீடு திரும்பவில்லை என இவரது மகன், செவ்வாய்க்கிழமை (27) பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அக்கரைப்பற்று நீதிமன்றத்துக்கு

# தீ வைத்த மூவர் கைது

கனகராசா சரவணன்

அக்கரைப்பற்று நீதிமன்ற கட்டட பதிவேட்டு அறைக்கு தீவைத்த சம்பவம் தொடர்பாக மூன்று இளைஞர்களை ஹெரோயின் போதைப்பொருளுடன் நேற்று முன்தினம் (28) பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கடந்த 21ஆம் திகதி அதிகாலை, நீதிமன்ற கட்டடத்திற்கு இனம்தெரியாதேரால் தீவைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான பொலிஸ் குழு விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

இதன்போது, நீதிமன்றத்தின் அயலில் உள்ள வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த சிசிரி கமெரா மூலம் அவதானிக்கப்பட்டபோது, முகமூடி அணிந்த மூன்று பேர் நீதிமன்ற கட்டத்துக்குள் நுழைந்த காட்சிகளை அடிப்படையாக வைத்து, விசாரணை முன்னெடுக்கப்பட்டதில், நீலாவணை பகுதியில் பதுங்கிருந்த அக்கரைப்பற்று கோளால் பகுதியைச் சேர்ந்த மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 24 வயதுடையவருக்கு ஒன்பது நீதிமன்ற பிடிவிறாந்து உள்ளதுடன், இவர் யாழ். ஆவா குழுவுடன் செயற்பட்டிருந்தாகவும் அவரின் நண்பர்களான 20, 17 வயதுடையவர்கள் ஒன்றினைந்து, இந்தத் தீவைப்பு சம்பவத்தில் ஈடுபட்டதாகவும் அக்கரைப்பற்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# சமத்துவக் கட்சியின் வன்னி தலைமையகம் திறப்பு

க. அகரன்

சமத்துவக் கட்சியின் வன்னி தலைமை அலுவலகம், வவுனியா கந்தசுவாமி வீதியில் நேற்று முன்தினம் (28) திறந்து வைக்கப்பட்டது.

அலுவலகத்தின் பெயர்ப்பலகையை கட்சியின் தவிசாளர் சுப்பையா மனோகரனும் கட்சி அலுவலகத்தை கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமரனும் திறந்து வைத்தார்கள்.

இந் நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தவிசாளர் தர்மலிங்கம் யோகராஜா எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



# மாணவர்களுக்கு போதைமாத்திரை விற்றவர் கைது

கனகராசா சரவணன்

யாழ்ப்பாணம், ஆறுகால் மடம் பகுதியில் பாடசாலை மாணவர், பல்கலைக்கழக மாணவர் ஆகியோரை மையப்படுத்தி, போதை மாத்திரை விற்பனை செய்துவந்த 19 வயதுடைய வியாபாரியை, நேற்று முன்தினம் (28) குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்தனர். யாழ்ப்பாண பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி உபபொலிஸ் பரிசோதகர் தெய்வநாயகம் மேனன் தலைமையிலான குழுவினர், குறித்த பகுதியிலுள்ள வீடொன்றை முற்றுகையிட்ட போது, போதை மாத்திரை வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த இளைஞனை கைது செய்ததுடன், அவரிடமிருந்து ஐயாயிரம் போதை மாத்திரைகளையும் மீட்டனர்.

# தம்பலகாமத்துக்கு புதிய பொலிஸ் பொறுப்பதிகாரி

ஹஸ்பர்



திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக ஏ.எஸ்.டபிள்யூ.ஆர் பண்டார நேற்று (29) மத அனுஷ்டானத்துடன் தனது கடமையை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர், இதற்கு முன்னர் பூண்டுலோயா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றியிருந்ததுடன் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் பொலிஸ் கடமையை திறம்பட ஆற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடலாமையை இறைச்சியாக்கியவர்கள் கைது

செந்தூரன் பிரதீபன்

காரைநகர் பகுதியில் கடலாமையை இறைச்சியாக்கிய ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர். இதன் போது 35 கிலோ கிராம் கடலாமை இறைச்சி கைப்பற்றப்பட்டது. கைது செய்யப்பட்ட நபர்கள் 35 தொடக்கம் 40 வயதுக்கு உட்பட்டவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அச்சுவேலிக்கு புதிய பொறுப்பதிகாரி

செந்தூரன் பிரதீபன்

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாக எச்.யூ பிரியந்த, நேற்று (29) தனது கடமைகளை சர்வ மத பிரார்த்தனைகளுடன் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பண்டாரவளை பொலிஸ் பிராந்தியத்தின் போஹாகும்புர பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியிருந்த நிலையில், வருடாந்த இடமாற்றத்துக்கு அமைய, அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

# “மலையகம் 200” விருதுகள்



பல்வேறு துறைகளில் சாதித்த, சாதிக்கத் துடிக்கும் எம்மவர்களை ஊக்கப்படுத்த மலையகம் மீடியா நெட்வேர்க் பெருமையுடன் வழங்கும் “மலையகம் 200“ விருதுகள் வழங்கும் நிகழ்வு கந்தலோயா பாடசாலை மண்டபத்தில் சனிக்கிழமை (31) காலை 9 மணிக்கு நடைபெறும்.

# முதலாமிடம்



■ நடராஜா மலர்வேந்தன்

கர்நாடக இசை மற்றும் இஸ்லாமிய போட்டி நிகழ்ச்சிகள் அகில இலங்கை ரீதியாக, அநுராதபுர ஸ்வர்ணபாலி பெண்கள் பாடசாலையில் செவ்வாய்க்கிழமை (27) நடைபெற்றன. இப்போட்டியில், வாத்திய இசையில் வீணை வாசிப்பதில் முதலாம் இடத்தை பதுளை சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயத்தில் தரம் 11இல் பயிலும் மாணவன் N.மிரோஷன், ,பக்க வாத்திய இசை வழங்கிய உயர்தர வகுப்பு மாணவன் S.தினுஸ் பெற்றுக்கொண்டனர். அவர்களுடன் இசைத்துறை பொறுப்பாசிரியை திருமதி. பவானியையும் படத்தில் காணலாம்.

## தமிழ் முற்போக்கு கூட்டணியின் செயற்பாடு

# ஆமை போல் நகர்கின்றது

“தேசியப் பட்டியல் ஆசனம்" என்ற தமக்கான அரசியல் உரிமையை வென்றெடுப்பதில் தமிழ் முற்போக்கு கூட்டணி அசமந்த போக்குடன் செயற்பட்டு வருவதை,அனுமதிக்க முடியாது. எனவே, மலையக மக்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழி நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறு, இல்லாவிட்டால் கூட்டணிக்கு இது பெரும் பின்னடைவாக அமையும்." என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

“ ஐக்கிய மக்கள் சக்தியுடன், பல சுற்று பேச்சுகளின் பின்னர் முக்கிய சில விடயங்களை முன்வைத்தே கூட்டணி அமைக்கப்பட்டது. இதில், ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைக்கும் தேசியப் பட்டியல் ஆசனங்களில் , தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு கட்டாயம் இடமொன்று ஒதுக்கப்படும் என்ற உறுதிமொழியும் வழங்கப்பட்டிருந்தது.



பொதுத்தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு அமோக வெற்றி கிடைத்தது. நுவரெலியா, கண்டி, பதுளை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெற்றது. அதேபோல, இரத்தினபுரி, கேகாலை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களிலும் கூட்டணியின் வேட்பாளர்கள் குறிப்பிட்டுக்கூறக்கூடியளவுக்கு வாக்குகளைப் பெற்றனர். எனவே, தேசியப் பட்டியலை, பெறுவதில் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு எல்லா விதத்திலும் உரிமை இருந்தது. மக்கள் ஆதரவும் கிட்டியது.

ஆனால் தேர்தலின் பின்னர், ஐக்கிய மக்கள் சக்தி எமக்கு வழங்கிய வாக்குறுதியை மீறியது. மக்கள் நலன்கருதி அமைதி காத்தோம். தேசியப்பட்டிய லொன்று வெற்றிடமாகும் சந்தர்ப்பத்தில் அந்த வாய்ப்பு வழங்கப்படும் எனவும் கூறப்பட்டது.

அதுவும் நடப்பதாக தெரியவில்லை. கூட்டணி என்ற போர்வையில் சரணாகதி அரசியல் நடத்துவதற்கு நான் தயாரில்லை. மக்கள் அதற்காக எனக்கு வாக்களிக்கவும் இல்லை. தேசியப் பட்டியலை,வென்றெடுப்பதில் தமிழ் முற்போக்கு கூட்டணி ஆமை வேகத்தில் செயற்படுவதை அனுமதிக்க முடியாது. மக்களும் அதிருப்தியுடனேயே உள்ளனர்." என்றும் வேலுகுமார் எம்.பி தெரிவித்தார்.

# 11 வயதான சிறுமி துஷ்பிரயோகம்: பிக்குவும் பிக்குவின் தம்பியும் கைது

■ சுமணசிறி குணதிலக்க

11 வயதான சிறுமியை பாலியல் ரீதியில் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் கீழ், விஹாரையின் கடமையாற்றும் பிக்குவும் அந்த பிக்குவின் சகோதரனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொனராகலை, தொம்பஹாவெல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லியன்கொல்ல பிரதேசத்திலேயே இந்த சம்பவம், இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துவதற்கு உடந்தையாக இருந்த சிறுமியின் பாட்டி மற்றும் அத்தை ஆகிய இருவரும் புதன்கிழமை (28) கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சிறுமி, கந்தானை பிரதேசத்திலுள்ள உறவினர் வீட்டில் இருந்து பாடசாலைக்குச் செல்கின்றார். பாடசாலை விடுமுறைக்கு லியன்கொல்ல பிரதேசத்திலுள்ள உறவினர்களின் வீட்டுக்கு நவம்பர் மாதம் வந்துள்ளார்.

அச்சிறுமியை பாட்டி விஹாரைக்கு அழைத்துச் சென்றுள்ளார். அந்த விஹாரையில் வைத்து பிக்குவும், சிறுமியின் அத்தையின் வீட்டில் வைத்து பிக்குவின் சகோதரனும் சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளனர் என்பது விசாரணைகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.

கந்தானைக்கு சிறுமி திரும்பியதன் பின்னர், தனக்கு நேர்ந்ததை உறவினர்களிடம் தெரிவிக்க, இதுதொடர்பில் கந்தானை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டு அமைய, கந்தானை பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கு இணங்க தொம்பஹாவெல பொலிஸார். இந்த நால்வரையும் கைது செய்தனர்.



# ‘வீட்டு வேலைத் தொழிலாளர்’ தொழிற் சங்கம் ஆர்ப்பாட்டம்

■ மொஹமட் ஆஸிக்

வீட்டுப் பணிப் பெண்களாகத் தொழில் புரிபவர்களது அமைப்பான ‘வீட்டு வேலைத் தொழிலாளர்’ தொழிற்சங்கம் கண்டியில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை ஒழுங்கு செய்திருந்தது. கண்டி, கொழும்பு, வவுனியா, மட்டக்களப்பு, காத்தா ன்குடி, ஹட்டன், மஸ்கெலியா , கேகாலை, பதுளை, அம்பாறை உற்பட நாடலாவிய ரீதியில் இருந்து தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களப் பெண்கள் சுமார் 500 பேர், இதில் பங்கு கொண்டனர்.

தமக்கெதிராக மேற்கொள்ளப்படும் அநீதிகள் வேதனப்பிரச்சினைகள், பாதுகாப்பு போன்ற பல விடயங்களை முன்வைத்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர், பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக தாம் இதில் இருந்து விடுபட முடியாதிருப்பதாகவும் ஆர்ப்பாட்டக்கார்ர்கள் தெரிவித்தனர்.

வெளிநாடுகளில் வீட்டுப்பணிப் பெண்களாகப் பணிபுரிந்து பல்வேறு பாதிப்புக்களை சந்தித் பலரும் இதில் பங்கு கொண்டனர்.

கண்டி ஸ்டேசன் வீதியில் இருந்து தலதா வீதிவரை சென்று டொரிடன் பூங்காவில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து, கோஷங்களை எழுப்பினர், பின்னர் அமைதியாகக் கலைந்து சென்றர்.

# ரூ, 20 இலட்சம் செலவில் ஆயுர்வேத வைத்தியசாலை

■ செ.தி.பெருமாள்

பொகவந்தலாவ, நோர்வூட், மஸ்கெலியா வாழ் மக்கள் ஆயுர்வேத வைத்திய தேவைகளுக்காக தலவாக்கலை மற்றும் நாவலப்பிட்டிய நகரங்களுக்கே செல்ல வேண்டிய நிலை காணப்பட்டது.

கோரிக்கைகளுக்கு அமைவாக பொகவந்தலாவ நகரில் முதற்கட்டமாக ஆயுர்வேத வைத்தியசாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதற்கான வைத்தியர் ஒருவரையும் பெற்றுக் கொடுத்துள்ளேன். அதனூடாக தற்போது மக்கள் இலவசமாக வைத்திய சேவைகளை பெற்று பயனடைகின்றனர் என்று நோர்வூட் பிரதேச சபையின் தவிசாளர் ரவி குழந்தைவேல் தெரிவித்தார்.

20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் பொகவந்தலாவ நகரில் அமைக்கப்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலை செவ்வாய்க்கிழமை (27) திறந்து வைக்கப்பட்டது.

இதனூடாக பொகவந்தலாவ பிரதேசத்துக்கு உட்பட்ட 35 பிரிவுகளில் உள்ள மக்கள் இலவசமாக ஆயுர்வேத வைத்திய சேவையினை பெற்றுக்கொள்ள வாய்ப்பாக அமையும் என்றார்.



# கேகாலையில் முட்டை கடும் விலை

■ என். ஆராச்சி

கேகாலை நகரிலுள்ள பல வர்த்தக நிலையங்களில் முட்டை ஒன்றின் விலை 62 ரூபாய் முதல் 67 ரூபாய் வரைக்கும் விற்பனைச் செய்யப்படுகின்றது என நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

முட்டையொன்றின் சில்லறை விலை 55 ரூபாயாக முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் நிர்ணயித்திருக்கும் நிலையிலேயே வர்த்தகர்கள் சிலர், தங்களிடமிருந்து பணத்தை அபகரிக்கின்றனர் என்றும் நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

## “லெனின் மதிவானம் :இளமை – புலமை– இனிமை”

# நூல் வெளியீட்டு விழா

■ வி.ரி.சகாதேவராஜா

அமரர் லெனின் மதிவானம் நினைவாக தொகுக்கப்பட்டுள்ள ‘லெனின் மதிவானம் இளமை - புலமை- இனிமை” எனும் நூல் வெளியீடு சாஹித்யரத்னா மு. சிவலிங்கம் தலைமையில் ஹட்டன் டிக்கோயா நகரசபை மண்டபத்தில் சனிக்கிழமை (31) காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாக்யா பதிப்பகத்தின் வெளியீடாக , நோட்டன் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், வரவேற்புரையை வாசகர் வட்டத்தின் தலைவர் ஊடகவியலாளருமான மு.இராமச்சந்திரன் நிகழ்த்தவுள்ளார்.

பேராசிரியர் பால. சுகுமார், மல்லியப்புசந்தி திலகர், ஜே.சற்குருநாதன், சிராஜ் மஷ்ஹூர், சுமதி அன்பரசு, சிவ ஜேசு நேசன், ச.வில்சன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

# முத்துமாரியம்மன் ஆலய காணியை அபகரித்தமையை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

### களத்தில் குதித்து அதிரடியாகத் தீர்த்தார் குழந்தைவேல்

■ எஸ்.சதீஸ்

ஹட்டன்- டிக்கோயா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்துக்குச் சொந்தமான காணியை அபகரித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து டிக்கோயா தோட்ட தொழிலாளர்களால் புதன்கிழமை (28) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் காணி, தனி நபரொருவரினால் அபகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இவ்வார்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்ட பகுதிக்கு, நோர்வூட் பிரதேச சபையின் தவிசாளர் குழந்தை வேல் அழைக்கப்பட்டார்.

அபகரிக்கப்பட்ட அந்த காணி தொடர்பில் கோரிக்கையொன்று ஆர்ப்பாட்டக்காரர்களால் முன்வைக்கப்பட்டது. அதனையடுத்து ஆலயத்தின் காணியில் குவிக்கப்பட்டிருந்த கற்களை அகற்ற தவிசாளர் ரவி குழந்தைவேல் நடவடிக்கையை எடுத்திருந்தார்.

கற்கள் அகற்றப்பட்ட பின்னர், அவ்விடத்தில் தேர்வாகனத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் நிறுத்தி வைத்தனர்.

இது தொடர்பில், நோர்வூட் பிரதேச சபையின் தலைவர் ரவி குழந்தைவேல் கருத்து தெரிவிக்கையில், குறித்த காணியானது நோர்வூட் பிரதேச சபைக்கு உட்பட்ட அதிகார பிரதேசத்தில் உள்ளது. அக்காணி தொடர்பில் மக்கள் என்னிடம் வைத்த கோரிக்கைக்கு அமைய ஆலயத்தின் காணியை சட்டவிரோதமான முறையில் அபகரித்தைமை தொடர்பில் பிரதேச சபை ஊடாக, சம்பந்தப்பட்ட நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.





# மூளைசாலிகளின் வெளியேற்றம் சவாலானதாகவே இருக்கும்

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் மூளைசாலிகளின் பங்கேற்பும் வகிபாகமும் இன்றியமையாததாகும். எனினும், அவர்களுக்கான மாதாந்த ஊதியம், வாழ்க்கைச் செலவுக்கே போதுமானதாக இல்லாவிடின், அவர்கள் வெளியேறுவதை யாராலும் தடுக்கவே முடியாது. நமது நாட்டைப் பொறுத்தவரையில், வெளிநாடுகளுக்கு செல்வதையே பலரும் பெரும்பாலும் விரும்புகின்றனர். அந்தளவுக்கு பொருளாதாரம் கழுத்தை நெரித்துக்கொண்டிருக்கின்றது.

மிகமுக்கியமான துறைகளான வைத்தியத்துறை, நிர்மாணத்துறை, தகவல்தொழில்நுட்பம், வணிக மேம்பாட்டுத்துறை உள்ளிட்ட இன்னும் பல துறைகளைச் சார்ந்த மூளைசாலிகள், அடுத்தடுத்த கட்டங்களைக் கவனத்தில் எடுத்து, நாட்டிலிருந்து வெளியேறிவருகின்றனர். அதுமட்டுமன்றி, சாதாரண தொழில்களுக்காக வெளியேறுவோரின் எண்ணிக்கையும் வெகுவாக அதிகரித்திருக்கிறது.

'இங்கு இனிமேலும் வாழமுடியாது; வெளிநாடுகளுக்குச் சென்று சம்பாதிப்பதே ஒரே வழி' என நினைப்போரின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. பொருட்கள், சேவைகள் என்பவற்றின் விலை அதிகரிப்பு உள்ளிட்டவற்றால், சாதாரணமாக சீவியம் நடத்தமுடியாத நிலைமையே ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜனவரி மாதத்தில் இருந்து அறவிடப்படவிருக்கும் புதியவரி அதிகரிப்பும், நடுத்தர குடும்பங்களைச் சார்ந்தவர்களின் மீது கடுமையான தாக்கத்தையே செலுத்தும்.

வெளிநாடுகளில் இருந்து பணம் அனுப்பும்போது இந்தப் புதிய வரி, தாக்கத்தை செலுத்தாது என்றும் எனினும், அந்தப் பணத்துக்கான வரி, ஒரு இலட்சம் ரூபாயை தாண்டுமாயின் அதற்கு வரி அறவிடப்படுமெனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆகையால், நாட்டிலிருந்து வெளியேறிய மூளைசாலிகள், பணத்தை அனுப்புவதை பெரும்பாலும் தவிர்த்துக் கொள்வார்கள்.

மக்கள் மீதான வரிச்சுமை அதிகரித்தால் செலவுகளும் அதிகரிக்கும். இவை அன்றாட வாழ்க்கையில் பாரிய தாக்கத்தைச் செலுத்தும். ஆகையால், வரிகளை அறிமுகப்படுத்தும்போது, பல தரப்பட்ட பிரிவினரையும் கவனத்தில் எடுக்கவேண்டும். இல்லையேல், அன்னிய செலாவணியை ஈட்டிக்கொள்வதில் அரசாங்கத்துக்கு பின்னடைவே ஏற்படும்.

பல துறைகளையும் சார்ந்த மூளைசாலிகள் வெளியேறும் போது, நாட்டின் அபிவிருத்தி மந்தகதியிலேயே நகரும். அவற்றை சீர்செய்யவேண்டுமாயின், மூளைசாலிகள் வெளியேறுவதைத் தடுக்க வேண்டும். அப்படியான, தொழில்களுக்கு ஏற்ற ஊதியத்தை வழங்குவதற்கு, அரசாங்கம் முன்வரவேண்டும். இவை எவையுமே அரசாங்கத்திடம் இல்லை.

ஆகையால், ஏற்படப்போகும் நிபுணர்களின் வெற்றிடங்களுக்கு வெளிநாடுகளில் இருந்தே நிபுணர்களை வரவழைக்கவேண்டும். தற்போதைய சூழ்நிலையில், பெரும் சம்பளம், கொடுப்பனவுகளை வழங்கமுடியாது. ஆக, வெளிநாடுகளில் இருந்து மூளைசாலிகள் வருவார்கள் என்பதை எதிர்பார்க்கவே முடியாது. இது நாட்டின் அபிவிருந்தியில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும்.

நாட்டில் தொழிற்றுறைகள் செயலிழந்து கொண்டிருந்தால், வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அவர்கள், தங்களுடைய வாழ்க்கையை கொண்டு செல்வதற்கு, பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்தே ஆகவேண்டும்.

சகல சவால்களுக்கும் முகங்கொடுத்து, நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லவேண்டுமாயின், பொருளாதார பிரச்சினைக்கு அதிரடியானதும் அவசரமானதுமான தீர்வைக் கண்டு, மூளைசாலிகளின் வெளியேற்றத்தைத் தடுக்கவே வேண்டும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

மனிதரின் வாழ்க்கை குறுகியது; நிலையற்றது என சிலருக்கு நன்கு புரியும். ஆனால், பெரும்பாலானோருக்கு இது புரிவதே இல்லை.

வாழ்க்கை குறுகியது எனத் தெரிந்தும், சொத்துகளைக் குவிக்கிறார்கள். அநேகர் தான தர்மங்களைச் செய்வதுமில்லை; எங்கும் சுயநலமே கோலோச்சுகின்றன.

வாழ்க்கையில் அடுத்து என்ன நடக்கும் என்று, எவருக்கும் உறுதியாகச் சொல்ல முடியாது. எனினும், நாம் வாழும் பூமிக்கு சின்னச் சின்ன உதவிகளையாவது எம்மால் செய்ய முடியும். 'நாளைக்கு நான் செய்ய இருக்கிறேன்' எனச் சொல்வது நகைப்புக்கு உரியது. நாளை என்பது எவருக்கும் நிரந்தரமானது இல்லை.

அதனால், நாங்கள் எண்ணிய நல்ல காரியங்களை, உடனே செய்ய வேண்டும். கூடியவரை பிறகு செய்வோம் எனக் கடத்தக்கூடாது.

செல்வந்தர்கள் அறப்பணிகள் செய்வதை உடனே செய்தால், பயன் கிடைக்கும். அடுத்த வினாடி மனம் மாறுவது மனித இயல்பு.

தேவையில்லாத விடயங்களில், ஆர்வமாக இருப்பவர்கள், சிறப்பான காரியங்களைச் செய்வதற்கு ஏன் தயங்க வேண்டும்? நற்காரியங்களை உடன் செய்க!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# வலதுசாரி தீவிரவாதத்தின் நிழலில் – 08: நாஜிகளை தப்பவைத்த அமெரிக்க உளவுத்துறை



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இரண்டாம் உலகப்போரின் முடிவில் கைது செய்யப்பட்ட நாஜிகளில் பலரை, அமெரிக்கா திட்டமிட்டுத் தப்பவைத்தது என்று கடந்தவாரம் பார்த்தோம். ஏன் அமெரிக்கா நாஜிகளைத் தப்பவைத்தது? அதற்கான காரணங்கள் என்ன போன்ற வினாக்கள் எழுவது இயற்கையானது. இவை குறித்துப் பார்ப்போம்.

அமெரிக்க உளவுத்துறை, நாஜிகளைத் தப்பவைத்ததன் பின்னணியில் இருப்பது, அவர்களைத் தங்கள் தேவைகளுக்காகப் பயன்படுத்தலாம் என்ற எண்ணமாகும். இதை சில ஆண்டுகளுக்கு முன்னர், பொதுவெளியில் பார்வைக்காக அனுமதிக்கப்பட்ட இரகசிய ஆவணங்கள் உறுதிப்படுத்துகின்றன.

கெடுபிடிப்போரின் உண்மையான வெற்றியாளர்கள் நாஜி போர் குற்றவாளிகள்; அவர்களில் பலர் நீதியிலிருந்து தப்பிக்க முடிந்தது. நாஜிகளைத் தண்டிப்பதை விட, அவர்களை சோவியத் ஒன்றியத்துக்கு எதிராகப் பயன்படுத்துவது, அமெரிக்காவுக்கு முக்கியமானதாக இருந்தது என்று இந்த ஆவணங்களைப் படித்தோர் தெரிவிக்கிறார்கள்.

இந்த ஆவணங்கள், கெடுபிடிப்போர் காலத்தின் மிகவும் இரகசியமான உண்மையை வெளிப்படுத்தியுள்ளன. சோவியத் ஒன்றியத்துக்கு எதிராக, ஓர் இரகசிய பிரசாரத்தை நடத்த சி.ஐ.ஏ ஒரு விரிவான நாஜி உளவு வலையமைப்பைப் பயன்படுத்தியது.

இரண்டாம் உலகப்போரில் நாஜிகளின் குற்றங்கள், சித்திரவதைகள், கொலைக்கூடங்கள் என்றவுடன் முதலில் நினைவுக்கு வரும் பெயர் அடல்ப் ஹிட்லருடையது. அதற்கு அடுத்தாக நினைவுக்கு வருவது 'மரண தேவதை' என அறியப்பட்ட ஜோசப் மெங்கலே ஆவார். ஒரு வைத்தியராக, சிறைக்கூடங்களில் கைதிகளை வைத்து மோசமான உயிரியல் பரிசோதனைகளை மேற்கொண்டார். இவற்றுக்காக ஆயிரக்கணக்கானோர் கொலைசெய்யப்பட்டனர். வாயு கூடங்களுக்கு அனுப்பும் கைதிகளைத் தெரிவுசெய்தார்; வாயு கூடங்களை மேற்பார்வை பார்த்தார்; இந்த வாயு கூடங்களில் இலட்சக்கணக்கான யூதர்கள் கொலையுண்டனர். இவரது உயிரியல் சோதனைகள் நெஞ்சை நடுங்கவைக்கும் தன்மையுடையன.

ஜூலை 1945இல், ஜோசப் மெங்கேலே பிடிபட்டார். கைதிகள் முகாமில் வைத்து அடையாளம் காணப்பட்டார். கைதியின் பெயர் மட்டுமல்ல, ஆஷ்விட்ஸில் மருத்துவர், பரிசோதனை செய்பவர், மரணதண்டனை செய்பவர் என அவரது குற்றங்களின் பொதுவான தன்மையும் அறியப்பட்டது என்று அம்முகாமில் இருந்த நேரடி சாட்சிகள் தெரிவித்துள்ளன.

ஆயினும், இக்குற்றங்களைச் செய்த நாஜி அமைப்பான 'ஷட்ஸ்டாஃபெல்' இன் அவரது சக உறுப்பினர்களைப் போலவே, மெங்கலேயும் எப்படியோ காணாமல் போக அனுமதிக்கப்பட்டார். அவர் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, இலத்தீன் அமெரிக்காவில் மீண்டும் தோன்றினார். 30 ஆண்டுகளுக்கு முன்பு, 'நல்ல யுத்தம்' என்று அழைக்கப்பட்டதில் வெற்றி பெற்ற கூட்டாளிகள், மெங்கலே போன்ற ஒரு கொடூரமான கொலைகாரனை வேண்டுமென்றே விடுதலை செய்ய அனுமதித்திருக்கலாம் என்று சிலர் நம்பியிருப்பார்கள்.

எவ்வாறாயினும், தேடப்படும் குற்றவாளிகளை முகாம்களில் இருந்து 'தப்பிவிட' சி.ஐ.ஏ ஏற்பாடு செய்தது. அவர்களைப் பாதுகாக்க புதிய அடையாளங்களை அவர்களுக்கு வழங்கியது என்பது இப்போது மிகவும் தெளிவாகிவிட்டது. இக்கொலையாளிகள் நீதியிலிருந்து விலக்கு பெறவும் பாதுகாக்கப்படவும், அமெரிக்க உளவுத்துறை கடினமாக உழைத்ததை பொதுவெளிக்கு அனுமதிக்கப்பட்ட ஆவணங்கள் காட்டுகின்றன.

குறிப்பாக, இலத்தீன் அமெரிக்காவுக்குத் தப்பிச்செல்ல அனுமதிக்கப்பட்ட மெங்கலேயும் அவர்தம் கூட்டாளிகளும் அங்கு அமெரிக்க உளவுத் துறைக்குப் பணியாற்றியுள்ளார்கள். லியானின் கசாப்புக் கடைக்காரர் (the Butcher of Lyon) என அறியப்பட்ட கிளாஸ் பார்பி பொலிவியாவிலும், வாயுக்கூடங்களுக்குப் பொறுப்பாக இருந்து பல இலட்சம் பேரை விசவாயு ஏற்றிக் கொண்ட வால்டர் ராஃப் சிலியிலும், தேடப்படும் இன்னொரு பெருங்கொலைகாரனான ஃபிரெட்ரிக் ஸ்வென்ட் பெருவிலும் அமெரிக்க உளவுத்துறைக்காகப் பணியாற்றினர்.

மெங்கலேவைப் போலவே, இந்த மூன்று பேரும் தங்கள் புதிய நாடுகளின் இராணுவம் மற்றும் உள்துறை அமைச்சகங்களில் உள்ள நவபாசிச கூறுகளுடன் தொடர்புகளை வளர்த்துக் கொண்டனர். இடதுசாரிகளுக்கு எதிரான அடக்குமுறை நடவடிக்கைகளில் அனைவரும் ஒத்துழைத்தனர், குறிப்பாக, சி.ஐ.ஏ உதவியுடன் சிலியில் அலெண்டே ஆட்சி கவிழ்க்கப்பட்ட நேரத்தில் இவர்களின் பங்களிப்பு முக்கியமானது.

பார்பியும் ஸ்வென்ட்டும் மேற்கு ஜேர்மனியின் உளவு அமைப்பின் தனியுரிம நிறுவனமான Merex AG உடனான ஆயுத ஒப்பந்தங்களை வசதிப்படுத்தியுள்ளனர். இவர்கள் இருவரும் அமெரிக்காவின் சம்பளப்பட்டியலில் இருந்தனர்.

இவர்களுக்கும் அமெரிக்க உளவுத்துறையின் உயர்மட்டத்தினருக்கும் நெருங்கிய உறவு இருந்தது. இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் இத்தாலியில் நாஜிகளும் பாசிஸ்டுகளும் தனியே சரணடைவதற்கும் பாதுகாப்பாக அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்தப்படுவதற்குமான ஏற்பாடுகளை இவர்கள் இருவரும் அமெரிக்க உதவியோடு செய்தார்கள்.

வடஇத்தாலியில் இத்தாலிய கம்யூனிசக் கட்சி அதிகாரத்தை கைப்பற்றும் நிலையில் இருந்தார்கள். இது இத்தாலியில் எஞ்சியிருந்த பாசிஸ்டுகளின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியது. இதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் இறங்கும்படி, இவர்கள் அமெரிக்க உளவுத்துறையினரிடம் கேட்டுக் கொண்டனர். இத்தாலியில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியைக் கைப்பற்றுவதைத் தடுக்க அமெரிக்காவும் நாஜிகளும் இணைந்து பணியாற்றிய உண்மையை, இரண்டாம் உலகயுத்தம் பற்றிய வரலாற்றாசிரியர்கள் தவிர்த்து விடுகிறார்கள்.

இரண்டாம் உலகப்போரின் முக்கியமான ஆவணம் ஹிட்லரின் 'இறுதித் தீர்வு'. இது 'யூதர்களின் கேள்விக்கான இறுதித் தீர்வு' என்றறியப்பட்டது. இது ஐரோப்பியக் கண்டத்துக்குள் மட்டுமல்ல; எட்டக்கூடிய எல்லை வரை அடையக்கூடிய அனைத்து யூதர்களையும் கொலை செய்வதற்கான அதிகாரப்பூர்வ குறியீட்டுப் பெயராகும்.

ஜேர்மன் ஆக்கிரமித்துள்ள ஐரோப்பா முழுவதும் இது நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற புவிசார் அரசியல் அடிப்படையில், ஜனவரி 1942இல் பெர்லின் அருகே நடைபெற்ற 'வான்சி' மாநாட்டில் நாஜி தலைமையால் உருவாக்கப்பட்டது. இந்த 'வான்சி' நிறுவகத்துக்குப் பொறுப்பாகவிருந்து இறுதித் தீர்வுக்கு தத்துவார்த்த விளக்கத்தைக் கொடுத்த நாஜி சித்தாந்தவாதி எமில் ஒக்ஸ்பர்க்.

போரின் முடிவில் போலந்தால் போர்க்குற்றங்களுக்காக இவர் வேண்டப்பட்டார். ஆனால், இவரை ஒப்படைக்க மறுத்த அமெரிக்கா, 1952ஆம் ஆண்டு எழுதப்பட்ட குறிப்பில், இவரைப்பற்றி பின்வருமாறு சொல்லியது: "ஒக்ஸ்பர்க் நேர்மையானவர்; இலட்சியவாதி. நல்ல உணவு மற்றும் மதுவை அனுபவிக்கிறார். பாரபட்சமற்ற மனம் கொண்டவர்". சி.ஐ.ஏ 1940களின் பிற்பகுதியில், சோவியத் விவகாரங்களில் நிபுணராக அவரைப் பணியில் அமர்த்தியது.

இதேபோலவே, பிரான்ஸில் பெருங்கொலைகளைச் செய்த பார்பியை தங்களிடம் வைத்துக்கொண்டு, பார்பி குறித்து எதுவித தகவலும் தெரியாது என்று பிரெஞ்சு அதிகாரிகளிடம் அமெரிக்க உளவுத்துறையினர் கூறினர். ஆனால், பிரெஞ்சு புலனாய்வுத்துறையினருக்கு பார்பி அமெரிக்காவின் வசம் இருக்கும் தகவல் தெரிந்திருந்தது. பிரான்ஸில் செய்யப்பட்ட கொலைகளுக்காகவே லியோனின் கசாப்புக்கடைக்காரன் என அறியப்பட்டவரை, விசாரிக்கவோ தண்டனை வழங்கவோ பிரான்ஸால் முடியவில்லை. இன்னும் சரியாகச் சொல்வதானால் அமெரிக்கா அனுமதிக்கவில்லை.

இத்தகவல்களின் பின்னணியில் மெங்கலேயிற்கு என்ன நடந்தது என்பதை ஊகிக்க முடியும். இரண்டாம் உலகப்போரின் கொடூரங்களின் பிரதான கதாபாத்திரங்களில், மெங்கலேயின் இடம் முக்கியமானது. ஆனால், இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு அவருக்கு என்ன நடந்தது என்பது பற்றிய விரிவான ஆய்வுகளோ, நூல்களோ இல்லை. அதை ஒரு முடிந்த அத்தியாயமாகவே வரலாறு பதிவுசெய்கிறது.

ஆஷ்விட்ஸ் மனித பரிசோதனைகளில் மெங்கலேயின் சக பணியாளராக இருந்த வால்டர் ஷ்ரைபர் அமெரிக்கர்களால் பாதுகாக்கப்பட்டார். அவர் அமெரிக்க விமானப்படையின் போருக்குப் பிந்தைய ஆராய்ச்சிகளுக்கு உதவினார். குறிப்பாக பாக்டீரியாவியல் போரில் (Bacteriological warfare) வழிகாட்டினார்.

அவர் 1952ஆம் ஆண்டு, அர்ஜென்டினா வழியாக பராகுவேயில் தன்னை மீண்டும் நிலைநிறுத்த, அமெரிக்க அதிகாரிகள் உதவினர். அதே 1952ஆம் ஆண்டு மெங்கலே அர்ஜென்டினாவில் தோன்றினார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அவர் பராகுவே சென்றார். 1957ஆம் ஆண்டு பராகுவே மெங்கலேயிற்கு குடியுரிமை வழங்கியது. இடைப்பட்ட காலத்தில் அவர் எங்கு சென்றார், என்ன செய்தார் போன்ற வினாக்களுக்கான விடைகள் இன்னமும் மறைக்கப்பட்டுள்ளன; அமெரிக்க உளவு ஆவணங்களில் இருக்கக்கூடும்.

இரண்டாம் உலகப் போரின் தீப்பிழம்புகள் இன்னும் எரிந்து கொண்டிருக்கும் வேளையில், ரூஸ்வெல்ட், சர்ச்சில், ஸ்டாலின் ஆகியோர் நாஜி தலைவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தனர். மில்லியன் கணக்கான அப்பாவி குடிமக்களின் சித்திரவதைக்கும் கொலைக்கும் காரணமானவர்கள், பூமியின் எப்பகுதிக்குச் சென்றாலும், மூலை முடுக்கெல்லாம் அவர்களைப் பின்தொடர்ந்து, நீதியை நிலைநாட்டுவதற்காக அவர்களை நீதியின் முன் நிறுத்தும் என்று மூன்று நேசசக்திகளாலும் உறுதியளிக்கப்பட்டது.

ஸ்டாலின் மட்டுமே சொன்னதைச் செய்தார். மற்ற இருவரும் அவ்வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை. நீதியை வழங்கவில்லை. நாஜிகளுடன் கைகோர்த்தவர்களிடம் நமக்கான நீதியை வேண்டி நிற்பது முரண்நகை மட்டுமல்ல; துயரமும் கூட!

## கடிதங்கள்

### சுகாதார வைத்திய அதிகாரி விடுதி: பாழடைந்துள்ள அரச கட்டடம்

திருகோணமலை, தம்பலகாமம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட தம்பலகாமம் - கிண்ணியா பிரதான வீதியில் அமையப் பெற்றுள்ள அரச கட்டடம், பல வருடங்களாக பாழடைந்து, காடு மண்டி, கவனிப்பாரற்று காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுமார் எட்டு வருடங்களுக்கும் மேலாக, குறித்த சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் விடுதி கட்டடமே, இவ்வாறு பாழடைந்து காணப்படுகிறது. இதனால், அருகாமையில் உள்ள குடியிருப்பாளர்கள், டெங்கு நோய் தாக்கத்துக்கும் உள்ளாகி உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறித்த அரச கட்டட வளாகத்துக்குள் பற்றைக் காடு காணப்படுவதுடன், நுளம்பு பெருக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்பும் அதிகளவில் காணப்படுகிறது.

தற்போதுள்ள நிலையில், அரச கட்டடங்கள் பல திணைக்களங்களுக்கு பற்றாக்குறையாகக் காணப்படும் நிலையில், இவ்வாறான கட்டடத்தை பயன்படுத்துவதன் ஊடாக, கட்டட பற்றாக்குறைகளைத் தவிர்க்கலாம்.

இக்கட்டடம் அமைந்திருக்கும் வளவு, கால்நடைகளின் மேய்ச்சல் தளமாக மாறியுள்ளதுடன் மழைக் காலங்களில் நீர் தேங்கியும் நிற்கின்றது. எனவே, இக்கட்டடத்தை பாவனைக்கு உகந்த வகையில் பயன்படுத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஹஸ்பர்



# சர்வதேச தொழிலாளர் அமைப்பும் ஜப்பான் அரசாங்கமும் கைகோர்ப்பு

நாடு திரும்பும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் சமூக- பொருளாதார பின்னடைவை வலுபடுத்தும் வகையில், கடல்சார் துறையானது நாடு திரும்பிய மற்றும் ஆர்வமுள்ள புலம்பெயர் தொழிலாளர்களுக்கு ஏராளமான வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் திறனைக் கொண்டுள்ளது என சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) அடையாளப்படுத்தியுள்ளது. கடல் மற்றும் கடற்றொழில் சார் அறிவியல் பயிற்சிநெறியினை நிறைவு செய்த 22 பயிற்சியாளர்களுக்கான பட்டமளிப்பு விழாவை மஹாபொல துறைமுகம் மற்றும் கடல்சார் கல்விச்சாலை ஆகியன, ஜப்பான் அரசாங்கத்தின் ILO ஆதரவுடனும் இலங்கை கடற்படையினர் தேசிய ஒன்றியத்தின் (NUSS) அனுசரணையுடனும் அண்மையில் வெற்றிகரமாக நடத்தியது.

இப்பயிற்சி பாட நெறியானது, கப்பல் தள அதிகாரிகளுக்கு நாளாந்தம் தேவையான உதவிகளை வழங்குவதற்குத் தேவையான திறன்கள் மற்றும் அறிவை பயிற்சியாளர்கள் பெறுவதற்கு ஏதுவான வகையில் முறையான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட ரீதியிலான பயிற்சியை வழங்கியது. இப்பயிற்சி பாட நெறியானது, நாளாந்த செயல்பாட்டு நடவடிக்கைகளான டெக்-ரேட்டட் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை இயக்குவதற்கான அனுபவம், கண்காணிப்பு மற்றும் கண்காணிப்பு பணிகளில் கப்பல் தள அதிகாரிகளுக்கு உதவுதல் போன்ற அனைத்து செயல்பாட்டு நடவடிக்கைகளுக்குமான பயிற்சிகளை உள்ளடக்கியது.

சான்றுதழ் வழங்கும் விழாவில் கலந்து கொண்ட இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி "ஜப்பானின் உதவி புலம்பெயர்ந்தோருக்கு உண்மையான வேலைவாய்ப்பு மற்றும் திறன் வாய்ப்புக்களைப் பெறுவதற்கு




உதவியாக இருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். நாடு திரும்பியோரது நடைமுறை திறன்களை வலுப்படுத்துவதையும் அவர்களின் தொழில்முனைவை ஊக்குவிப்பதையுமே இச் செயற்றிட்டத்தின் நோக்கமாக ஜப்பான் அரசாங்கம் கொண்டுள்ளது" என தெரிவித்தார்.

இலங்கை மற்றும் மாலைத்தீவிற்கான ILO நாட்டின் பணிப்பாளர் சிம்ரன் சிங், அத்தியாவசிய வேலைகளை உருவாக்கக் கூடிய மற்றும் பாதிக்கப்படகூடியவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தக் கூடிய இத்தகைய பயிற்சி பாடநெறியை வழங்குவதற்கான யோசனை மற்றும் ஆற்றலை ஒருங்கிணைத்த துறைமுக அதிகாரசபை, மஹபொல பயிற்சி மையம் மற்றும் கடலோடிகள் தேசிய ஒன்றியம் என்பவற்றினை பாராட்டியதோடு தனது கற்றலை வெற்றிகரமாக முடித்த முதல் தொகுதி பட்டதாரிகளுக்கும் தனது வாழ்த்தினைத் தெரிவித்தார்.

இத்துவக்க முயற்சியானது ஜப்பான் மக்களின் ஆதரவுடன், ILOவின் "இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களின் சமூக பொருளாதார மறு ஒருங்கிணைப்பு திட்டம்" ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் தகவல்களுக்கு தொடர்புகொள்ளவும்: திருமதி ஸ்ரீயானி ஏகநாயக்க, தேசிய திட்ட ஒருங்கிணைப்பாளர், இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான ILO நாட்டின் அலுவலகம்

## உறைய வைக்கப்பட்ட கிறிஸ்பி சிக்கன் முன்னோடி
# நியூ அந்தனீஸ் ஃபார்ம்ஸ்




ஆரோக்கியமான தேசத்துக்கான போஷாக்கான இறைச்சி வகைகளை வழங்குவதில் கீர்த்தி நாமத்தைக் கொண்டுள்ள, இலங்கையில் கோழி இறைச்சி உற்பத்தியில் முன்னோடிகளாகத் திகழும் நியு அந்தனீஸ் பார்ம்ஸ் (பிரைவட்) லிமிடெட், உறைய வைக்கப்பட்ட கிறிஸ்பி சிக்கன் சந்தையில் தனது பிரசன்னத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதற்காக தனது விநியோக தந்திரோபாயத்தை விரிவாக்கம் செய்து, இந்தப் பிரிவில் தனது நிலையை மேலும் உறுதி செய்துள்ளது.

கிறிஸ்பீஸ் எனும் வர்த்தக நாமத்தின் கீழ் சந்தைப்படுத்த ப்படுவதுடன், தங்கப் பழுப்பு நிறத்திலான இந்த சிற்றுணவு, ஹரித சிக்கன் தரச் சான்றிதழின் கீழ் பசுமையாகவும், பாதுகாப்பாகவும் உற்பத்தி செய்யப்பட்டு, போஷாக்கு நிறைந்ததாகவும், அன்ரிபயோடிக் அற்றதாகவும் அமைந்துள்ளது.

நியு அந்தனீஸ் ஃபார்ம்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி நீல் சுரவீர கருத்துத் தெரிவிக்கையில், "பாவனையாளர்கள் உடனடியாக தயாரித்துக் கொள்ளக்கூடிய தரமான சிற்றுணவை நுகர்வது நோக்கி தம்மை மாற்றி வரும் நிலையில், உறைய வைக்கப்பட்ட இறைச்சி வகைகளுக்கான கேள்வி அதிகரித்துள்ளதை எம்மால் அவதானிக்க முடிகின்றது." என்றார். பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும், நேர்த்தியான நிலைப்பாட்டை நியு அந்தனீஸ் ஃபார்ம்ஸ் கொண்டுள்ளது.

அண்மைய மாதங்களில் பெருமளவான வளர்ச்சியை இறைச்சி உற்பத்தியாளர் பதிவு செய்திருந்தது. உற்பத்தி மற்றும் விநியோகத் தொடர் ஆற்றல்களில் பெருமளவு முதலீடுகளை மேற்கொண்டிருந்ததுடன், சர்வதேச சந்தைகளில் செயற்பாடுகளை விஸ்தரிப்பது தொடர்பிலும் தனது வெற்றிகரமான ஏற்றுமதி தந்திரோபாயத்தில் உள்வாங்கியுள்ளது.

உள்நாட்டைப் பொறுத்தமட்டில், 2022 என்பது, நியு அந்தனீஸ் ஃபார்ம்ஸ் நிறுவனத்துக்கு பல முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல் சாதனைகளை ஏற்படுத்தியிருந்தது. தளம்பல்களுடனான தொழிற்துறை சூழ்நிலைகளில் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்திருந்தது. பத்தரமுல்லயில் அதிகளவு இடவசதிகளுடன், நவீன இறைச்சி சுப்பர்மார்க்கெட்டான அந்தனீஸ் மீட்லரியை திறந்திருந்தது. இது விரைவில் விற்பனைத் தொடராக வளர்ச்சியடையும். தொரகடபலிய எனும் தனது ஒன்லைன் இறைச்சி விற்பனை நிலையத்தினூடாக, நாடு முழுவதிலும் இலவச விநியோக சேவையை மேற்கொள்வதுடன், ஹரித சிக்கன் தெரிவுகளுக்கு 100சதவீதம் கொம்போஸ்ட் செய்யக்கூடிய பொதியிடல் தீர்வுகளை வழங்குவதற்கும் தன்னை மாற்றியிருந்தது.

உள்நாட்டவர்களின் சுவைகளை தொடர்ச்சியாக நிவர்த்தி செய்வது மற்றும் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளை விஞ்சுவது போன்றவற்றுக்கமைய, தனது வர்த்தக நாமங்களில் ஹரித ஹரி, கிறிஸ்பீஸ், சிக்கோ, ஸ்பைசிடைசி, அந்தனீஸ் ப்ரீகட் மற்றும் சிக்கன்என்ட்ஸ் ஆகியனவும், சொசேஜ்கள், கோல்ட் கட்ஸ், முட்டைகள், வாசனைத் திரவியங்கள் மற்றும் சோஸ் வகைகள் போன்றனவும் அடங்கியுள்ளன.

நியு அந்தனீஸ் ஃபார்ம்ஸ், கோழிப் பண்ணைகளுக்கு மூலப் பொருட்களை தெரிவு செய்வது முதல், அவற்றை பதப்படுத்தி பேணுவது வரையில், தனது முழு விநியோகத் தொடரிலும் கடுமையான கொள்கைகள் மற்றும் செயன்முறைகளைக் கொண்டுள்ளது. அமெரிக்காவின் தேசிய சிக்கன் சம்மேளனத்தின் (NCC) விலங்கு நலன்புரி விதிமுறைகளையும் பின்பற்றுகின்றது. இதர சான்றிதழ்களில் GMP, HACCP, ISO 22000, உள்நாட்டு மற்றும் சர்வதேச ஹலால் சான்றிதழ்கள் போன்றன அடங்கியுள்ளன. பச்சை இல்ல வாயு வெளியேற்றங்களைக் கட்டுப்படுத்துவது மற்றும் உயிரியல்ரீதியில் உக்கும் பொதியிடல் தீர்வுகள் போன்றவற்றுக்கான ISO 14064-1:2018 தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துள்ள ஒரே கோழி இறைச்சி உற்பத்தியாளராகவும் திகழ்கின்றது. நிறுவனத்தின் இதர முயற்சிகளில் பூஜ்ஜிய கழிவு வெளியேற்றச் செயற்பாடுகள் மற்றும் உயர்மட்ட கழிவுநீர் வழிகட்டல் வசதி போன்றனவும் அடங்கியுள்ளன.

இந்தியா

# 18 சிறுவர்களின் உயிரைப் பறித்த இருமல் மருந்து

இந்திய நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட இருமல் மருந்தை அருந்திய 18 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர் என உஸ்பெஸ்கிதான் சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து உஸ்பெஸ்கிதானின் சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் "நொய்டாவில் உள்ள மேரியன் பயோடெக்(Marion Biotech) என்ற நிறுவனம் தயாரித்த இருமல் மருந்ததான டாக்-1 மேக்ஸ் என்ற சிரப்பை குடித்ததால் 18 சிறுவர்கள்



உயிரிழந்துள்ளனர்.

ஆய்வக பரிசோதனையில் குறித்த இருமல் மருந்தில் எத்திலின் கிளைகோல் என்ற நச்சுப்பொருள் இருந்துள்ளமை தெரியவந்துள்ளது.

அதுமட்டுமல்லாது இம் மருந்துகள் மருத்துவர்கள் பரிந்துரையின்றி அதாவது பெற்றோர்கள் அல்லது பார்மாசிஸ்டுகளின் அறிவுறுத்தலில் குழந்தைகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் சில குழந்தைகளுக்கு நிலையான அளவை தாண்டியும் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 18 சிறுவர்களின் உயிரிழப்பைத் தொடர்ந்து டாக்-1 மேக்ஸ் மருந்துகள் அனைத்து பார்மசிக்களில் இருந்தும் திரும்பப் பெறப்பட்டு விட்டன" இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகமதாபாத்

# மோடியின் தயாருக்காக பிரார்த்திக்கும் தலைவர்கள்

இந்திய பிரதமர் மோடியின் தாயார் 'ஹீராபென்' கடந்த சில நாட்களுக்கு முன்னர் உடல்நலக்குறைவு காரணமாக அகமதாபாத்தில் உள்ள மருத்துவமனையொன்றில் அனுமதிக்கப்பட்டார்.

இதனையடுத்து பிரதமர் மோடியின் தாயார் விரைவில் குணமடைய வேண்டுமென "தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்ட பல தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், தற்போது "பிரதமர் மோடியின் தாயார் விரைவில் குணமடைய தான் பிரார்த்தனை செய்வதாக" மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், "பிரதமர் நரேந்திர மோடியின் தாயார் விரைவில் குணமடையவும் நல்ல ஆரோக்கியமாக இருக்கவும் நான் பிரார்த்தனை செய்கிறேன். அனைவரும் அவருக்காக பிரார்த்தனை செய்யுங்கள், அவர் விரைவில் குணமடையட்டும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதேசமயம் பிரதமரின் தாயாரது உடல்நிலை சீராக இருப்பதாக மருத்துவமனை நிர்வாகத்தினரும் தெரிவித்துள்ளனர்.



# இரத்தத்தில் ஓவியம் வரையத் தடை



அண்மைக் காலமாகத் தமிழக மக்கள் மத்தியில், ' Blood Art ' எனப்படும் இரத்தத்தில் ஓவியங்கள் வரைந்து அதனை விரும்பியவர்களுக்குப் பரிசளிக்கும் கலாசாரம் அதிகரித்து வருகின்றது.

இதன் காரணமாக இதனைத் தொழிலாக மேற்கொள்பவர்களின் எண்ணிக்கையும் சமீப காலமாக, வெகுவாக அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் மனிதர்களின் இரத்தத்தில் ஓவியம் வரைவதால் HIV உட்பட பல வகையான தொற்றுக்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் இருப்பதாகவும் , எனவே மக்கள் இவ் விடயத்தில் அலட்சியமாகச் செயற்பட வேண்டாம் எனவும், மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் எச்சரித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "ஓவியத்திற்காக எடுக்கப்படும் இரத்தம் என்பது முறையான பாதுகாப்பு இல்லாத ஒன்றாகும். அதுமட்டுமல்லாமல் இரத்தம் எடுக்க பயன்படுத்தப்படுகிற ஊசியினை எத்தனை பேருக்கு பயன்படுத்துகிறார்கள் என்பது தெரியாது.

மேலும் குறித்த இரத்தத்தை திறந்த நிலையில் படம் வரைவதற்கு கையாளும்போது, அவ் இரத்தம் எச்.ஐ.வி போன்ற நோய் பாதிப்புக்கு உள்ளானவர்களிடமிருந்து எடுக்கப்பட்டால் அது, பலரையும் பாதிப்புக்குள்ளாக்கும்.

மேலும் இவ் ஓவியம் வரைவதற்கு ஏராளமான வழிகள் இருக்கிறது. ஒருவருடைய இரத்தத்தை எடுத்துத்தான் வரைய வேண்டும் என்று இல்லை. இரத்தம் என்பது பல உயிர்களை காக்கிற புனிதத் தன்மையுடையது.

இரத்ததானம் செய்வது என்பது இன்று அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக இருக்கிறது என்றாலும், அந்த இரத்தத்தை எடுத்து படம் வரைந்து வீணாக்குவது என்பது சரியான செயல் அல்ல" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

குஜராத்

# HIV இரத்தத்தை மனைவிக்குச் செலுத்திய கணவன்

குஜராத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது மனைவிக்கு HIV தொற்றினால் பாதிக்கப்பட்டவரின் இரத்தத்தை ஊசி மூலம் செலுத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

`சங்கர் காம்ப்ளே` என்ற குறித்த நபர் தனியார் நிறுவனமொன்றில் சாரதியாகப் பணியாற்றி வருகின்றார். இவருக்குத் திருமணமாகி பத்தாண்டுகளுக்கு மேல் ஆகின்றது. இந்நிலையில் சங்கர் அவரது மனைவியின் நடத்தையில் சந்தேகம் கொண்டதால் அவர்கள் இருவருக்கும் அடிக்கடி வாக்குவாதம் ஏற்பட்டுவந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இருவரும் தமது திருமண உறவை முறித்துக்கொள்வதற்கு முடிவெடுத்துள்ளனர். இந்நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இருவரும் சட்டப்பூர்வமாக விவாகரத்தினையும் பெற்றுக் கொண்டுள்ளனர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவாகரத்தின் பின்னர் மனைவியின் பிரிவை ஏற்க முடியாமல் தவித்த சங்கர் தனது மனைவியிடம் "மீண்டும் தன்னுடன் வந்து வாழுமாறு வற்புறுத்தியுள்ளார்.

எனினும் அவரது மனைவி அதற்கு மறுப்புத் தெரிவித்ததால் அவரைப் பழிவாங்கத் திட்டமிட்டுள்ளார்.

இதனையடுத்து "தன்னை இறுதியான ஒரு முறை சந்திக்குமாறும், இனிமேல் இவ்வாறு வற்புறுத்த




மாட்டேன்" எனவும் மனைவியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கு சம்மதம் தெரிவித்த மனைவியை, சங்கர் ஒரு தனிமைப்படுத்தப்பட்ட இடத்திற்கு அழைத்துச் சென்று அவரை கட்டி அணைத்து தனது சட்டையில் மறைத்து வைத்திருந்த சிரிஞ்சைப் பயன்படுத்தி அப்பெண்ணுக்கு எச்.ஐ.வி-யால் பாதிக்கப்பட்டவரின் இரத்தத்தை செலுத்தியுள்ளார்.

ஊசி செலுத்தப்பட்ட அதிர்ச்சியில் மயங்கி விழுந்த அந்த பெண், சுயநினைவுக்கு வந்த பின்னர் இது குறித்து பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ள நிலையில், சங்கரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் "தனது மனைவியைப் பழிவாங்குவதற்காகவே இவ்வாறு செய்ததாகவும், வெப்சீரிஸை பார்த்து இத் தாக்குதலைத் திட்டமிட்டதாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன் இதற்காக வைத்தியசாலையொன்றின் HIV பிரிவில் உள்ள நோயாளி ஒருவரிடமிருந்து பரிசோதனைக்காக மாதிரியை சேகரிக்கும் மருத்துவமனை ஊழியர் போல் நடித்து இரத்தத்தை சேகரித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தென்காசி

# குற்றாலத்தில் குளிக்கத் தடை

தென்காசி மாவட்டம், குற்றாலத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகின்றது.

இதன் காரணமாக அப்பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், சுற்றுலாப் பயணிகளுக்கு குற்றால அருவில் குளிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும் வெள்ளம் குறைவடைந்த பின்னர் மீண்டும் சுற்றுலாப் பயணிகளுக்குக் குளிப்பதற்கு அனுமதி அளிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



வன்னிப் பெருநிலப்பரப்பில்

# அரியதொரு தமிழ்க் கல்வெட்டு கண்டுபிடிப்பு

**இலங்கைத் தமிழரின் குறிப்பாக, வன்னித் தமிழரின் இருப்பு, இடைக்கால அரசியல் வரலாறு, தமிழ் அரச உருவாக்கம், பண்பாடு பற்றிய ஆய்வில் முக்கியத்துவம் பெறுகின்றது**





பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம்

வவுனியா வடக்கு, பெரியமடுப் பகுதியைச் சேர்ந்த த. சசிகரன், ப. செந்தூரன், வி. ஜெகதீஸ்வரன், இ. நகுலேஸ்வரன், வ. கிந்துஜன் ஆகியோர் அண்மையில் தமது நெற்காணிகளுக்கு காட்டு வழியூடாக சென்று வரும் போது, அக்காட்டில் அழிவடைந்த சிறிய கேணிக்கு அருகிலுள்ள கற்றூண் ஒன்றை அடையாளம் கண்டனர்.

அக்கற்றூணில் புராதன எழுத்துகள் சில இருப்பதை அவதானித்த அவர்கள், அதுபற்றிய புகைப்படத்தை எமது தொல்லியல் பட்டதாரிகளான சுதர்சன் தம்பதியினருக்கு அனுப்பி வைத்தனர். அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்ட அவர்கள், அப்புகைப்படத்தை எனக்கு அனுப்பி வைத்தனர்.

அப்புகைப்படத்தில் உள்ள எழுத்துகள் ஏறத்தாழ 800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்குரியவை என்பதை உறுதிப்படுத்திய நாம், தொல்லியல் திணைக்களக பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியுடன், பிராந்திய தொல்லியல் திணைக்களக ஆய்வு உத்தியோகத்தர்களான வ. மணிமாறன், பா. கபிலன் ஆகியோருடன் பெரியமடு பிரதேசத்துக்குச் சென்றிருந்தோம்.

இக்கல்வெட்டு, வவுனியா வடக்கில், நெடுங்கேணியின் தென்னெல்லையில் உள்ள பெரியமடு பிரதேசத்தின் நயினாமடு கிரமசேவகர் பிரிவுக்கு உட்பட்ட கோடலிபறிச்சான் என்ற காட்டுப்பகுதியில் காணப்படுகின்றது. இவ்விடத்தை இங்குள்ள சிறிய நடைபாதையில் இருந்து, அடர்ந்த காடுகள் ஊடாக நீண்ட நேரக் கால்நடைப் பயணத்தின் பின்னரே அடையமுடிந்தது.

இவ்விடத்துக்கு மிக அருகில் பாழடைந்த சிறிய கேணி காணப்படுகின்றது. அக்கேணியைச் சுற்றி, பொழிந்த வெள்ளைக் கருங்கற் தூண்கள் நாட்டப்பட்டுள்ளன. இவை இங்கிருக்கும் கேணியின் தொன்மையையும் அதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் புலப்படுத்துவதாக இருந்தது.

இவ்விடத்தின் சுற்றாடலில் பழடைந்த சில குளங்களும் சிறிய மண்மேடுகளும் அடர்ந்த காட்டுமரங்களுடன் சில புளிமரங்களும் இலுப்பை மரங்களும் காணப்படுகின்றன. அவற்றிடையே அரிதாக சில செங்கட்டிகளும் சிலவகை மட்பாண்ட ஓடுகளும் காணப்பட்டன. இவை முன்பொரு காலத்தில் இவ்விடங்களில் செறிவான மக்கள் குடியிருப்புகள் இருந்ததற்குச் சான்றாகும்.

ஆகவே, இவ்வாதாரங்களின் பின்னணியிலேயே இக்கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது. இக்கல்வெட்டு ஒரே வெள்ளைக் கருங்கல்லில் பீடத்துடன் இணைந்ததாகச் செதுக்கப்பட்டு, இங்கிருக்கும் கேணிக்கு அருகில் நாட்டப்பட்டிருந்துள்ளது. ஆயினும் தற்போது அக்கல்வெட்டுப் பாகம் மூன்று துண்டங்களாக உடைந்து, கேணிக்கு அருகிலேயே காணப்படுகின்றன.

அவற்றுள், 70 செ. மீ உயரமும் 24 செ. மீ அகலமும் கொண்ட கல்வெட்டின் பீடம் தனித்துண்டாகக் காணப்படுகின்றது. இதற்கு அருகில் 164 செ. மீ உயரமும், 20 செ. மீ அகலும் கொண்ட எழுத்து பொறிக்கப்பட்டுள்ள கல்லின் பாகமும் இன்னொரு துண்டமாகக் காணப்படுகின்றது.

இக்கல்வெட்டில் மேற்பாகத்தில் மங்கலச் சொல்லுடன் தொடங்கியிருக்க வேண்டிய இரண்டு அல்லது மூன்று வரிகள் கொண்ட கல்வெட்டின் பாகம் உடைந்த அல்லது உடைக்கப்பட்ட நிலையில் உள்ளது. ஆயினும் அப்பாகத்தை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. 164 செ. மீ உயரம் கொண்ட கல்லின் நான்கு பக்கங்களில் ஏறத்தாழ 63 வரிகளில் எழுத்துப் பொறிப்புகள் காணப்படுகின்றன. 16 வரிகள் கொண்ட நான்காவது பக்கச் சாசனத்தின் (எழுத்துப் பொறிப்புகளில்) சிலவரிகளின் எழுத்துகள் தேய்வடைந்து காணப்படுவதால் அவற்றைச் சரியாக வாசிக்கமுடியவில்லை. அவ்வரிகளை மீண்டும் முறையாகப் படியெடுக்கும் போது, இக்கல்வெட்டின் நான்கு பக்க சாசனங்களின் வாசிப்பும் முழுமைபெறலாம்.

அடர்ந்த காட்டினுள், மழையும் இருட்டும் தொடர்ந்த நிலையில், யானைகள் வந்துவிடுமோ என்ற அச்சத்துடன், குறுகிய நேரத்திலேயே இக்கல்வெட்டை படியெடுக்க வேண்டியிருந்தது.

இவ்வாறு படியெடுக்கப்பட்டவற்றின் புகைப்படங்களை படிப்பதற்கும், அவைபற்றிய கருத்துகளை அறிவதற்கும் வெளிநாடுகளில் வசிக்கும் எனது ஆசிரியர்களான பேராசிரியர் கா. இந்திரபாலா, பேராசிரியர் வை. சுப்பராயலு, பேராசிரியர் பொ. இரகுபதி, கலாநிதி இராஜகோபால் ஆகியோருக்கு அனுப்பி வைத்தேன்.

இக்கல்வெட்டு படிகளை, பேராசிரியர் வை. சுப்பராயலு, பேராசிரியர் பொ. இரகுபதி ஆகியோர் தனித்தனியாகப் படித்து, எனக்கு அனுப்பி வைத்தனர். அவர்களின் வாசிப்பையிட்டு பேராசிரியர்

**“ இக்கல்வெட்டில் இருந்து அறியப்படும் வரலாற்றுச் செய்திகள், இடைக்கால வடஇலங்கையின் வரலாறு பொறுத்தும் தமிழர் வரலாறு பொறுத்தும் எழும் கேள்விகளுக்கு விடைகூறும் புதிய செய்திகளைத் தருவதாக இருக்கும்**

இந்திரபாலாவும் தனது திருப்தியை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்தியிருந்தார். அவர்களின் வாசிப்பின் முக்கிய அம்சங்களை, இவ்விடத்தில் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

ஜெயபாகு தேவரது பன்னிரண்டாவது ஆட்சியாண்டின் போது, வடகரைநாட்டு மூன்று கை திரு வேளைக்காறர் பிரிவைச் சேர்ந்த மதிமான் பஞ்சரத்தெரிந்த வில்லிகள் என்ற படைப்பிரிவு வீரர்கள் இங்கிருந்த கோவிலின் அம்பலம் (மடம்) பொகொறோணி (சிறுகுளம்) கிணறு ஆகியவற்றின் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர் என்பதும், இவற்றைச் செய்தவன் மூவேந்தவேளான் என்ற பட்டம் கொண்ட அதிகாரி என்பதும் தெரியவருகின்றது.

மேலும், இக்கல்வெட்டின் இரண்டாம், மூன்றாம் பக்கங்களில், இப்படைப்பிரிவில் இருந்த படைவீரர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. அவற்றில் ஒரே பெயர் பல படைவீரர்களுக்குரிய பெயர்களாகக் காணப்படுகின்றது. அப்பெயர்களாக: 1.- -இர 2. க்கன் 3. இரக்கன் 4. பெரியான் 5. இரக்கன் 6. புத்தை 7. நெட்டுர் 8. ஆதித்தந் 9. கொடி 10. சோழன் 11. சாத்தன் 12. கண்டந் 13. கூத்தந் 14. ஏறன் 15. சுந்தன் 16. சாத்தன் 17. சாத்தி 18. சாத்தன் 19. அம்மணி 20. சாத்தன் 21. இரக்கந் 22. கண்டந் 23. அம்பலம் 24. சோழன் 25. அழுதி ஆகிய பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டில் இருந்து அறியப்படும் வரலாற்றுச் செய்திகள், இடைக்கால வடஇலங்கையின் வரலாறு பொறுத்தும் தமிழர் வரலாறு பொறுத்தும் எழும் கேள்விகளுக்கு விடைகூறும் புதிய செய்திகளைத் தருவதாக இருக்கும். இக்கல்வெட்டில் வரும் ‘ஜெயபாகு’ என்ற பெயரில், பொலநறுவை இராசதானி காலத்தில் மூன்று சிங்கள மன்னர்கள் ஆட்சிபுரிந்துள்ளனர். அவர்கள் வெளியிட்ட ஆறு கல்வெட்டுகள் இதுவரை கிடைத்துள்ளன. இதேவேளை ‘ஜெயபாகு’ என்ற பெயர் கொண்ட ஒருவனை பாளி, சிங்கள இலக்கியங்கள், தமிழ் மன்னன், தமிழ்ச் சிற்றரசன், பொலநறுவையில் கலிங்கமாகனுடன் இணைந்து ஆட்சிபுரிந்த துணையரசன் எனவும், அவனிடம் நாற்பதாயிரம் படைவீரர்கள் இருந்ததாகவும் கூறுகின்றன. ஆயினும், பாளி, சிங்கள இலக்கியங்கள் கூறும் ஜெயபாகுவும் கல்வெட்டில் வரும் ஜெயபாகு மன்னனும் ஒருவனா என்பது, கல்வெட்டின் காலத்தைச் சரிவர வரையறுத்ததன் பின்னரே கூறமுடியும்.

இக்கல்வெட்டில், ‘வடகரைநாடு’ பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. சிங்கள கல்வெட்டுகளிலும் பாளி, சிங்கள இலக்கியங்களிலும் வடஇலங்கை வடகர( வடகரை), படகர ( ப/வ) என அழைக்கப்பட்டுள்ளது. ஆயினும், தமிழக கல்வெட்டுகளில் வடகரைநாடு பற்றி பல குறிப்புகள் காணப்படுகின்றன. இதனால் இக்கல்வெட்டில் வரும் வடகரைநாடு என்பது எந்த நாட்டைக் குறிக்கின்றதென்பது ஆராயப்படவேண்டிய ஒன்றாகும்.

இக்கல்வெட்டு, ‘மதிமான் பஞ்சரத்தெரிந்த வில்லிகள்’ என்ற படைப்பிரிவு வீரர்கள் பற்றிக் கூறுகின்றது. ‘மதிமான் பஞ்சரன்’ பற்றிய சில சான்றுகள் இடைக்கால இலங்கை கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. ஆயினும், பேராசிரியர் சுப்பராயலு, இப்பெயர் கொண்ட படைப்பிரிவு தமிழகத்தில் இருந்ததற்கு சான்றுகள் இல்லையெனக் கூறுகின்றார். இதனால், இப்படைப்பிரிவை இலங்கைக்கு உரியதாகப் பார்க்க இடமுண்டு. இதை எதிர்கால ஆய்வுகள் மூலம் மேலும் உறுதிப்படுத்தவேண்டும்.

இன்று காடாகக் காணப்படும் ‘கோடலிபறிச்சான்’, இற்றைக்கு 1,000 ஆண்டுகளுக்கு முன்னரும் காடாக இருந்திருக்கும் எனக் கூறமுடியாது. ஏனெனில், இக்கல்வெட்டு இற்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன்னரே இவ்விடத்தில் கோவில், மடம், சிறுகுளம், கிணறு இருந்தன என்ற புதிய செய்தியைத் தருகின்றது. இவற்றில் இருந்து, இங்கு இந்து கோவில் இருந்துள்ளமை உறுதியாகத் தெரிகின்றது. இக்கூற்றைத் தற்போது அழிவடைந்து காணப்படும் கேணியும் அதைச்சுற்றி பரவலாகக் காணப்படும் பொழிந்த வெள்ளைக் கருங்கற் தூண்களும், அருகில் காணப்படும் உயர்ந்த மண்மேடுகளும் உறுதிசெய்கின்றன. அவ்விடங்களில் அகழ்வாய்வுகள் செய்யப்படுமானால் அந்த உண்மையை மேலும் உறுதி செய்யலாம்.

இங்கிருந்த ஆலய மடம், சிறுகுளம், கிணறு என்பன தமிழ்ப்படை வீரர்களுக்கு ஜீவிதமாக வழங்கப்பட்டமையும், அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பை அப்படைவீரர்கள் ஏற்றுக் கொண்டமை பற்றியும் இக்கல்வெட்டுக் கூறுவது, அதிமுக்கிய வரலாற்றுச் செய்தியாக உள்ளது. இவற்றில் இருந்து, சோழர் ஆட்சியின் முடிவோடு, வடஇலங்கை பொலநறுவையின் பண்பாட்டு வட்டத்தில் இருந்து படிப்படியாக விடுபட்டு வருவதை, இச்செய்தி உணர்த்துவதாக உள்ளது.

அண்மைக்காலங்களில், இலங்கை தமிழர் தொடர்பாக வெளிவந்த வரலாற்று நூல்களும் கல்வெட்டுகளின் கண்டுபிடிப்புகளும் 1070இல் சோழரின் ஆட்சி வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து, இலங்கை தமிழரின் அரசியல், பண்பாட்டு வரலாறு தனிப்போக்குடன், தமிழ்ப் பிரதேசங்களில் படிப்படியாக வலுப்பெற்று வந்ததை வெளிப்படுத்துவதாக உள்ளன.

இதற்கு உதாரணமாக, சோழரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட சில சம்பவங்களை இவ்விடத்தில் குறிப்பிடலாம்.

சோழரை வெற்றி கொண்ட முதலாம் விஜயபாகு, தனது அரசையும் பௌத்த மதத்தையும் பாதுகாக்க, சோழர்காலப் படைவீரர்களிலேயே தங்கியிருந்தான். ஆயினும், அவன் சோழ நாட்டின் மீது படையெடுக்குமாறு, அப்படைவீரர்களை வேண்டிய போது அதை ஏற்க மறுத்த தமிழ்ப் படைவீரர்கள், பொலநறுவை அரசின் மீது படையெடுத்து, அவ்வரசை வெற்றி கொண்டனர்.

சூளவம்சம், இப்படை வீரர்கள் வடஇலங்கையில் உள்ள மகாதீர்த்த, மட்டிகாவட்டதீர்த்த ஆகிய இடங்களில் தங்கியிருந்தே இப்படையெடுப்புகளை மேற்கொண்டதாகக் கூறுகின்றது. அவற்றில் ‘மகாதீர்த்த’ என்ற இடம், மாதோட்ட துறைமுகத்தைக் குறிக்கின்றது. ‘மட்டிகாவட்டதீர்த்த’ என்ற இடம் பாளி இலக்கியத்தில் முதன் முறையாகக் குறிப்பிடப்படுகின்றது. இவ்விடம் மாதோட்டத்துக்கு வடக்கே, பூநகரிப் பிராந்தியத்தில் உள்ள ‘மட்டுவில் நாடு’ என்ற இடமாக இருக்கலாம்.

இரண்டாம் இராதிராச சோழனது பல்லவராயன்பேட்டைமற்றும் திருவாலங்காடு சோழக் கல்வெட்டுகள், வடஇலங்கையில் மாதோட்டம், புலச்சேரி முதலான இடங்களுடன் ‘மட்டிவால்’ என்ற இடத்தையும் சோழப் படைகள் வெற்றி கொண்டதாகக் கூறுகின்றது. கல்வெட்டில் கூறப்படும் ‘மட்டிவால்’ தற்போது பேச்சு வழக்கில் உள்ள ‘மட்டுவில்’ இடமாக இருக்கலாம். இவ்விடத்திலும் போத்துக்கேயர் காலக் கோட்டை கட்டப்பட்டதற்கு, இவ்விடம் துறைமுக நகராக இருந்ததே முக்கிய காரணமாகும்.

அண்மையில், திருகோணமலை மாவட்டத்தில் ஹோமாறன்கடவல (குமரன்கடவை) என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டிலிருந்து 1215இல் பொலநறுவையை வெற்றி கொண்டு ஆட்சிபுரிந்த கலிங்கமாகன், வடகலிங்கத்தில் இருந்தோ அல்லது மலேசியாவில் இருந்தோ படையெடுக்கவில்லை; மாறாக, அவன் ஹோமாறன்கடவலவில் இருந்த சோழப்பிரதிநிதியால் அல்லது சோழப் படைத்தளபதியால் ஆட்சிக்கு அமர்த்தப்பட்டவன் என்ற புதிய செய்தி தெரியவந்துள்ளது.

மேலும், 1070இல் பொலநறுவையில் சோழர் ஆட்சி வீழ்ச்சியடைந்தாலும் அவர்களின் ஆதிக்கமும் நிர்வாக ஒழுங்கும், தமிழர் பிரதேசத்தில் ஐரோப்பியர் காலம்வரை தொடர்ந்தமையும், இக்கல்வெட்டால் அறியப்படும் புதிய சான்றாகும்.

பொலநறுவை வீழ்ச்சியைத் தொடர்ந்து, கலிங்கமாகன் அரசு வடஇலங்கையில் இருந்ததற்குப் பாளி, சிங்கள இலக்கியங்களில் பல சான்றுகள் காணப்படுகின்றன. இவ்வரசின் தலைநகர் எது என்பதை இவ்விலக்கியங்கள் கூறாவிட்டாலும், அவனது படைநிலைகள், ஆதிக்கம் நிலவிய இடங்களாக புலத்திநகர (பொலநறுவை), கொட்டசார (திருகோணமலை கொட்டியாரம்) ஹந்கதலக (கந்தளாய்), காகலய, பதிமாவட்டம் (பதவியா), குருந்தி (குருந்தலூர், குருந்தலூர்மலை) மானாமத் (இவ்விடம் ஹோமாறன்கடவல கல்வெட்டில் கூறப்படும் மாநாமத்(து) நாடாக இருக்கலாம்), மகாதித்த (மாதோட்டம்), மன்னார (மன்னார்), புலச்சேரி, கோணா மாவட்டம் (கோணாவில்), மதுபதித்த (இலுப்பைக்கடவை), சூறதித்த (ஊர்காவற்துறை), வலிகாம (இவ்விடம் மன்னார் அல்லது யாழ்ப்பாணத்தில் உள்ள வலிகாமம் என்ற இடமாக இருக்கலாம்). இவ்விடங்களிலேயே கலிங்கமாகனுக்கு பின்னர் ஆட்சி புரிந்த சாவகன் காலத்திலும் அவன் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்ததை பாளி, சிங்கள இலக்கியங்கள் கூறுகின்றன.

இவ்விடங்களில் பெரும்பாலனவை திருகோணமலை உள்ளிட்ட வடபகுதியில் காணப்படுகின்றன. இவ்விடங்களில் சாகவன் ஆட்சி நிலவியதை தமிழகத்திலுள்ள புதுக்கோட்டை, குடுமியாமலையில் உள்ள 1262 ஆம் ஆண்டுக்குரிய பாண்டியக் கல்வெட்டும் உறுதிப்படுத்துகின்றது.

**“ தமிழர் தொடர்பாக வெளிவந்த வரலாற்று நூல்களும் கல்வெட்டுகளின் கண்டுபிடிப்புகளும் 1070இல் சோழரின் ஆட்சி வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து, இலங்கை தமிழரின் அரசியல், பண்பாட்டு வரலாறு தனிப்போக்குடன், தமிழ்ப் பிரதேசங்களில் படிப்படியாக வலுப்பெற்று வந்ததை வெளிப்படுத்துவதாக உள்ளன.
இதற்கு உதாரணமாக, சோழரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட சில சம்பவங்களை இவ்விடத்தில் குறிப்பிடலாம்**

கலிங்கமாகனுக்குப் பின்னர், இலங்கைமீது இரண்டாவது தடவையாகப் படையெடுத்த சாவகன் தென்னிந்தியாவிலிருந்து பாண்டிய, சோழப் படைகளுடன் மாதோட்டத்தில் வந்திறங்கி பதி (பதவியா), குருந்தி (குருந்தலூர்) ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்த மக்களைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு, தம்பதேனிய அரசு மீது படையெடுத்தான் எனச் சூளவம்சம் கூறுகின்றது. பேராசிரியர் இந்திரபாலா, இவன் சுதந்திர மன்னனாக இருந்தே இப்படையெடுப்பை மேற்கொண்டான் எனக் கூறுகின்றார்.

மேலே கூறப்பட்ட வரலாற்றுச் செய்திகள், கோடலிபறிச்சான் காட்டுப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றிய சிறு அறிமுகமாகும். இக்கல்வெட்டு, இலங்கைத் தமிழரின் அதிலும் குறிப்பாக, வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழரின் இருப்பு, இடைக்கால அரசியல் வரலாறு, தமிழ் அரச உருவாக்கம், பண்பாடு, இடப்பெயர் பற்றி ஆய்வில் முக்கியத்துவம் பெற்றதாகக் காணப்படுகின்றது.

ஆகவே, இக்கல்வெட்டை ஆராய்வதற்கு பலதுறை சார்ந்த புலமையாளரின் பங்களிப்பு மிக அவசியமாகும். இவற்றைக் கருத்தில் கொண்டே இக்கல்வெட்டின் நான்காவது பக்கத்தில் தெளிவற்றுக் காணப்படும் சில வரிகளை மீண்டும் படியெடுத்ததன் பின்னர், பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரியர் சுப்பராயலு, பேராசிரியர் இரகுபதி, கலாநிதி இராஜகோபால் ஆகியோரிடன் இணைந்து இக்கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவத்தை முழுமையாகப் பதிவுசெய்ய உள்ளோம். அவற்றின் பெறுபேறுகள் இரு மொழிகளில் வெளியிடப்படும்.

உக்ரேன்


உக்ரேன்–ரஷ்யப் போரில்

# 7,000 பேர் பலி

உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி , உக்ரேன் மீது ரஷ்யா கடந்த 10 மாதங்களுக்கு மேலாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது.

அதே சமயம் உக்ரேனும் ரஷ்யா மீது பதில் தாக்குதல் நடத்தி வருகின்றது. இப் போரில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உயிரிழந்துள்ள நிலையில், அண்டை நாடுகளுக்கு அகதிகளாக உக்ரேனைச் சேர்ந்த லட்சக்கணக்கான மக்கள் தஞ்சமடைந்து வருகின்றனர்.

இந்நிலையில் இப்போரில் தற்போது வரை சுமார் 7 ,000 பொது மக்கள் உயிரிழந்துள்ளனர் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது.



இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் ”போர் தொடங்கிய பெப்ரவரி மாதம் 24ஆம் திகதியிலிருந்து கடந்த 26ஆம் திகதி வரையில் போரில் பெண்கள், சிறுவர்கள் உட்பட 6,884 பேர் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் 10,947 பேர் காயமடைந்தனர்.

இது தவிர ரஷ்ய படைகளால் கைப்பற்றப்பட்ட உக்ரேன் நகரங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் மாத்திரம் 483 பேர் வரை கொல்லப்பட்டுள்ளதோடு 1,633 பேர் காயமடைந்தனர்” இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



சீனா

# கள்ளச்சந்தையில் குவிந்த சீனர்கள்

சீனாவில் கொரோனாத் தொற்றுப் பரவலானது மீண்டும் தீவிரமடைந்து வருகின்றது.

குறிப்பாக அந்நாட்டில் ஒமைக்ரோனின் `BF.7` துணை வைரஸ்களின் பரவலானது நாளுக்கு நாள் வெகுவான அதிகரித்து வருவதால் அங்கு மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அண்மைக்காலமாக ‘இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட, விலை குறைந்த மருந்துகளை கள்ளச்சந்தையில்கொள்வனவு செய்வதற்கு சீனர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர் ‘எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆப்கானிஸ்தான்

# தலிபான்களுக்கு ஐ.நா எச்சரிக்கை

ஆப்கானிஸ்தானில் கடந்த வருடம் ஆட்சியைக் கைப்பற்றிய தலிபான்கள் அந்நாட்டுப் பெண்களின் அடிப்படை உரிமைகளை பறிக்கும் விதமாக பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர்.

குறிப்பாக பெண்கள் ஆண்களின் துணையின்றி வெளியே செல்வதற்கும், பல்கலைக்கழகங்களில் கற்பதற்கும், விளம்பரங்களில் நடிப்பதற்கும், தொலைக்காட்சிகளில் தோன்றுவதற்கும், ஜிம் மற்றும் பூங்காவுக்குச் செல்வதற்கும் தலிப்பான்கள் தடை விதித்திருந்தமை சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்து.

இந்நிலையில் தலிபான்களின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக ஆப்கானிஸ்தானுக்கு வழங்கி வந்த சில உதவித் திட்டங்களை தற்காலிகமாக நிறுத்திவைப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

மேலும் பெண்களின் உரிமைகளுக்கு எதிராக தலிபான்கள் தொடர்ந்து செயற்பட்டு வந்தால், ஆப்கானிஸ்தானுக்கு வழங்கி வரும் முக்கிய உதவிகள் பல இடைநிறுத்தப்படுமெனவும் ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.



பிலிப்பைன்ஸ்



# வெள்ளத்தில் சிக்கி 29 பேர் உயிரிழப்பு

பிலிப்பைன்சில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி பலியானோரின் எண்ணிக்கை 29 ஆக உயர்ந்துள்ளது.

பிலிப்பைன்ஸின் மத்திய மற்றும் தெற்கு பிராந்தியங்களில் கடந்த சில நாட்களாக பலத்த காற்றுடன் கனமழை பெய்து வருகின்றது.

இதனால் பல நகரங்கள் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன.

குறிப்பான நூற்றுக்கணக்கான வீடுகள் மற்றும் வாகனங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் வெள்ளத்தில் சிக்கி 12 பேர் காணாமற் போயுள்ளனர் எனவும் அவர்களை தேடும் பணியில் மீட்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூடான்

# கனரக வாகனம்– பஸ் மோதி விபத்து: 16 பேர் உயிரிழப்பு

சூடானில் ஓம்துர்மன் நகருக்கு அருகே அண்மையில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த பஸ்ஸொன்று எதிரே வந்த கனரக வாகனத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானது.

கடந்த 27 ஆம் திகதி இடம்பெற்ற இக்கோரவிபத்தில் பெண்கள், சிறுவர்கள் உட்பட 16 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் 19 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



சீனா

# 3 ஆண்டுகளுக்குப் பின்னர் கடவுச் சீட்டு

கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் சீனாவில் கடவுச் சீட்டு வழங்கப்படும் பணியானது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வரும் ஜனவரி 8ஆம் திகதி முதல் கடவுச் சீட்டு வழங்கப்படும் பணியானது, மீண்டும்



நடைபெறவுள்ளதாக சீன அரசு தெரிவித்துள்ளது.

இதன் மூலம் ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுலாப் பயணிகளாக சீனர்கள் செல்லும் வாய்ப்பு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினதும் அண்மைக்காலமாக சீனாவில் கொரோனாத் தொற்றுப் பரவலானது தீவிரமடைந்து வருவதால், சீனர்களால் உலக நாடுகளுக்கு கொரோனாத் தொற்று பரவும் ஆபத்தும் அதிகளவில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றியது அவுஸ்திரேலியா

தென்னாபிரிக்காவுக்கெதிரான டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்றிருந்த அவுஸ்திரேலியா, மெல்பேணில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து நேற்று முடிவுக்கு வந்த இரண்டாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே, இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையில் தொடரைக் கைப்பற்றியுள்ளது.

நேற்றைய நான்காம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 15 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த தென்னாபிரிக்கா, சிறிது நேரத்தில் சரெல் எர்வி, தெனியுஸ் டி ப்ரூனை மிற்செல் ஸ்டார்க், ஸ்கொட் போலண்டிடம் இழந்ததோடு, காயா ஸொன்டோவை ரண் அவுட் மூலம் இழந்தது.

பின்னர் 33 ஓட்டங்களுடன் கைல் வெரைனை போலண்டிடம் இழந்த தென்னாபிரிக்கா, மார்கோ ஜன்சனை நேதன் லையனிடம் இழந்ததுடன், கேஷவ் மஹராஜ்ஜை ரண் அவுட் மூலம் இழந்ததுடன், தெம்பா பவுமாவை 65 ஓட்டங்களுடனும், ககிஸோ றபாடாவை லையனிடம் பறிகொடுத்ததோடு, இறுதியாக





ஸ்டீவ் ஸ்மித்திடம் லுங்கி என்கிடியை இழக்க சகல விக்கெட்டுகளையும் இழந்து 204 ஓட்டங்களையே பெற்று இனிங்ஸ் மற்றும் 182 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

தென்னாபிரிக்கா: 189/10 (துடுப்பாட்டம்: மார்கோ ஜன்சன் 59, கைல் வெரைன் 52 ஓட்டங்கள். பந்துவீச்சு: கமரொன் கிறீன் 5/27, மிற்செல் ஸ்டார்க் 2/39, ஸ்கொட் போலண்ட் 1/34, நேதன் லையன் 1/53)

அவுஸ்திரேலியா: 575/8 (துடுப்பாட்டம்: டேவிட் வோர்னர் 200, அலெக்ஸ் காரி 111, ஸ்டீவ் ஸ்மித் 85, கமரொன் கிறீன் ஆ.இ 51, ட்ரெவிஸ் ஹெட் 51 ஓட்டங்கள். பந்துவீச்சு: அன்றிச் நொர்கியா 3/92, ககிஸோ றபாடா 2/144, மார்கோ ஜன்சன் 1/89, லுங்கி என்கிடி 1/98)

தென்னாபிரிக்கா: 204/10 (துடுப்பாட்டம்: தெம்பா பவுமா 65, கைல் வெரைன் 33 ஓட்டங்கள். பந்துவீச்சு: நேதன் லையன் 3/58, ஸ்கொட் போலண்ட் 2/49, ஸ்டீவ் ஸ்மித் 1/9, பற் கமின்ஸ் 1/20, மிற்செல் ஸ்டார்க் 1/62)

போட்டியின் நாயகன்: டேவிட் வோர்னர்



ஹெம்மாத்தகம அல்– அஸ்ஹர் தேசிய பாடசாலை மாணவனான

# ஸையாப் சியாமுக்கு பாராட்டும் கௌரவமும்

அஸ்ஹர் இப்றாஹீம்

ஹெம்மாதகம வரலாற்றின் சாதனை வரிசையில் 12 வயதை தொடும் மாணவன் ஸையாப் சியாம் தேசிய ரீதியிலான 100 மீற்றர், 80 மீற்றர் போட்டிகளில் முதலாமிடம் பெற்று, சாதனை படைத்ததை பாராட்டும் முகமாக ஏற்பாடு செய்திருந்த மாபெரும் வாகனப் பேரணியும் பாராட்டு நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது.

அல் அஸ்ஹர் தேசிய பாடசாலை, பள்ளிபோருவ முஸ்லிம் வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவர்களின் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், ஹெம்மாத்தகம இளைஞர் அமைப்புக்கள், எமிரேட்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன இணைந்து நடாத்திய வாகனப் பேரணியையும், பாராட்டு நிகழ்வையும் ஏற்பாடு செய்திருந்தன.

நியூசிலாந்துக்கெதிரான ODI தொடருக்கான

# பாகிஸ்தானின் வீரர்கள் பட்டியலில் ஷர்ஜீல், மசூட், அப்ரார்



நியூசிலாந்துக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டி (ODI) தொடருக்கான வீரர்கள் பட்டியலுக்கு ஷர்ஜீல் கான், ஷண் மசூட், அப்ரார் அஹ்மட் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதில் கான், 5 ஆண்டுகளுக்குப் பின்னரும், மசூட் 3 ஆண்டுகளுக்குப் பின்னரும் அழைக்கப்பட்டுள்ளனர். அஹ்மட் ODI குழாமில் முதல் தடவையாக அழைக்கப்பட்டுள்ளார்.

பாபர் அஸாம் (அணித்தலைவர்), அப்துல்லாஹ் ஷஃபிக், அப்ரார் அஹ்மட், ஆமிர் ஜமால், ஹரிஸ் றாஃப், ஹஸன் அலி, இஹ்சனுல்லாஹ், இமாம்-உல்-ஹக், கம்ரான் குலாம், மொஹமட் ஹரிஸ், மொஹமட் நவாஸ், மொஹமட் றிஸ்வான், மொஹமட் வாஸிம், நசீம் ஷா, குவாசிம் அக்ரம், அக்ஹா சல்மான், ஷடாப் கான், ஷஹ்னவாஸ் டஹானி, ஷண் மசூட், ஷர்ஜீல் கான், தயீப் தஹிர்.

இந்தியச் சுற்றுப்பயணத்துக்கான

# இலங்கைக் குழாமில் சதீர சமரவிக்கிரம

இந்தியச் சுற்றுப்பயணத்துக்கான இலங்கைக் குழாமில் சதீர சமரவிக்கிரம இடம்பெற்றுள்ளார்.

இதேவேளை, அவிஷ்க பெர்ணாண்டோ, சாமிக கருணாரத்ன, ஆகியோர் குழாமுக்குத் திரும்பியுள்ளனர்.

இந்நிலையில், பானுக ராஜபக்‌ஷவும், நுவான் துஷாரவும் இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டிகளுக்கான குழாமில் மாத்திரமே இடம்பெற்றுள்ளதோடு, ஜெஃப்ரி வன்டர்சே, நுவனிடு பெர்ணாண்டோ ஆகியோர் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான குழாமில் இடம்பெற்றுள்ளனர்.



தவிர, இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டிகளுக்கான குழாமுக்கு வனிடு ஹஸரங்க உப அணித்தலைவராகவும், குசல் மென்டிஸ் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கு உப அணித்தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தனஞ்சய லக்‌ஷன், அசித பெர்ணாண்டோ, தினேஷ் சந்திமால் ஆகியோர் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: தசுன் ஷானக (அணித்தலைவர்), பதும் நிஸங்க, அவிஷ்க பெர்ணாண்டோ, சதீர சமரவிக்கிரம, குசல் மென்டிஸ், சரித் அஸலங்க, தனஞ்சய டி சில்வா, வனிடு ஹஸரங்க, அஷேன் பண்டார, மகேஷ் தீக்‌ஷன, சாமிக கருணாரத்ன, கசுன் ராஜித, டில்ஷான் மதுஷங்க, டுனித் வெல்லலாகே, பிரமோத் மதுஷன், லஹிரு குமார. பானுக ராஜபக்‌ஷ, நுவான் துஷார (இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டிகளுக்கு மாத்திரம்), ஜெஃப்ரி வன்டர்சே, நுவனிடு பெர்ணாண்டோ (ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கு மாத்திரம்).

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 30 டிசெம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.